# ஈழநாடு

Eelanadu வார மலர் ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 08.02.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 39 பக்கங்கள் : 16





மாருதி
Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை


## கிவுல் ஓயா திட்டம் தவறானது!

### ரிஷாத் பதியுதீன் சுட்டிக்காட்டு



வவுனியா, பெப். 08

பேரினவாத இனம் வாழ வேண்டும் என்பதற்காகவே காடுகளை அழித்து உருவாக்கப்படும் கிவுல் ஓயா திட்டம் பிழையானது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா சாளம்பைக்குளத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மதராசாவினை ஆரம்பித்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


"பிரஜா சக்தி" என்ற ஒன்றை உருவாக்குகின்ற பொழுது நாங்கள் சந்தோஷமடைந்தோம். அதன் ஊடாக குறித்த பிரதேசங்கள் முன்னேறும் என்ற ஒரு நம்பிக்கை இருந்தது.

ஆனால், குறித்த நிர்வாகத்தைச்

15

## சுமந்திரனின் அணுகுமுறையால் தமிழ் தேசிய சக்திகள் சிதறடிப்பு!

### ஆய்வாளர் யோதிலிங்கம் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், பெப். 08

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் சுமந்திரன் முன்னெடுக்கும் "கொழும்பு நலன்சார்" அரசியலுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தடையாக இருக்கிறார் என அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

சுமந்திரனின் அணுகுமுறையால் தமிழ்த் தேசிய சக்திகள் சிதறடிக்கப்படுகின்றன எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய உட்கட்சி மோதல்கள் மற்றும் பாராளுமன்றக் குழுத் தலைவர் மாற்றங்கள் குறித்து யோதிலிங்கம் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது-

சிறிதரன் பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டது முறையான அரசியல் குழுத் தீர்மானம் இன்றி, சுமந்திரனின் தன்னிச்சையான முடிவாகவே தெரிகிறது. நீதிமன்ற வழக்குகளில் சிக்கியுள்ள கட்சியின் தற்போதைய கட்டமைப்புகளுக்கு இத்தகைய முடிவுகளை எடுக்க தார்மீக அதிகாரம் இல்லை.

சிறிதரன் நீக்கப்பட்டதன் பின்னணியில் இராணுவத் தளபதிக்கு வாக்களித்த விவகாரம் ஒரு சாக்குப் போக்கு மட்டுமே. உண்மையான காரணம், சுமந்திரன் முன்னெடுக்கும் "கொழும்பு நலன்சார்" அரசியலுக்கு சிறீதரன் தடையாக இருப்பதே ஆகும்.

புதிதாக நியமிக்கப்பட்ட சாணக்கியன் தமிழ்த் தேசிய உணர்வுகளுக்குப் புறம்பானவர் என்றும், அவர் தென்னிலங்கை அரசியலை மையமாகக் கொண்டவர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

15

## முல்லைத்தீவில் களஞ்சியங்களில் 304 மெற்றிக் தொன் நெல் தேக்கம்!

### இதனால் நெற்கொள்வனவு தாமதம்

முல்லைத்தீவு, பெப். 08

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2025ஆம் ஆண்டு சிறுபோகத்தின் போது நெல்சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவுசெய்யப்பட்ட 304 மெற்றிக் தொன் நெல் பயன்டுத்தப்படாமல் களஞ்சியசாலைகளில் நிறைந்திருப்பதால் ஏற்பட்டுள்ள களஞ்சியசாலை நெருக்கடியினாலேயே நெல் சந்தைப்படுத்தல்சபையினால் தற்போது விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவு மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்

15

## நாமல் ராஜபக்ஷ போன்றவர்களின் இனவாத அரசியலுக்கு இடமில்லை!

### ஆளும் கட்சி திட்டவட்டம்

கொழும்பு, பெப். 08

இனவாதத்துக்கு இந்நாட்டில் இடமில்லை. நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள் இனவாத அரசியல் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்று ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமசந்திர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இனத்துக்காகவும், மதத்துக்காகவும் முன்னிலையாகும் அரசியல்வாதி தான்தான் என

15

## மழை குறைவடையும்

கொழும்பு, பெப். 08

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை இன்று முதல் எதிர்வரும் 11ஆம் திகதி வரை தற்காலிகமாகக் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம்

15

## மலையக மக்களின் நிலைக்கு பிரித்தானியாவே பொறுப்பு!

### மனோ கணேசன் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 08


மலையகத் தமிழர்களை இலங்கைக்கு அழைத்து வந்தவர்கள் என்ற ரீதியில், அவர்களின் தற்போதைய நிலைக்கு பிரித்தானியா வரலாற்று ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் பொறுப்பேற்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக்கை நேற்று சந்தித்த போது இந்த

15

## சூழ்ச்சி மூலம் ஆட்சியை தக்கவைக்கமாட்டோம்!

### கூறுகிறார் ரில்வின் சில்வா



கொழும்பு, பெப். 08

"சூழ்ச்சிமூலம் ஆட்சியை தக்கவைக்கும் எவ்வித நோக்கமும் எமக்கு கிடையாது. மக்கள் விருப்பத்துக்கு மாறாக பலவந்தமாக ஆட்சியில் இருக்கமாட்டோம்." என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டைக் கட்டியெழுப்பவே நாம் ஆட்சியைப் பொறுப்பேற்போம். அதனை செய்வதற்கு காலம் எடுக்கும். அதற்குரிய அடித்தளம் தற்போது இடப்பட்டுள்ளது. நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மக்களின் ஆசியுடன் ஆட்சியை தொடரவே விரும்புகின்றோம். மாறாக மக்கள் விருப்பமின்றி - பலவந்தமாக ஆட்சியில்

15

## டித்வாவினால் பெற்றோரை இழந்துள்ள 103 சிறுவர்கள்!

கொழும்பு, பெப். 08

டித்வா சூறாவளியினால், 103 சிறுவர்கள் தாய், தந்தை அல்லது இருவரையும் இழந்துள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

குறித்த சிறுவர்களைப் பராமரிப்பதற்கும் அவர்களின் எதிர்காலப் பாதுகாப்புக்கும் ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார்.

பெற்றோரை இழந்த சிறுவர்களைப்

15

## கணினி சார்ந்த குற்றங்களை தடுக்க புதிய பொலிஸ் பிரிவு!

கொழும்பு, பெப். 08

கணினி சார்ந்த குற்றங்களை தடுப்பதற்காக புதிய பொலிஸ் பிரிவொன்றை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நேற்று பொல்பிட்டிய பொலிஸ் நிலையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

15

## கச்சத்தீவு திருவிழா ஏற்பாடுகள் தீவிரம்!

யாழ்ப்பாணம், பெப். 08

யாழ்ப்பாணம் - கச்சத்தீவு, புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா பெப்ரவரி 27 ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் இந்த நிகழ்விற்கு தேவையான ஏற்பாடுகளை செய்துள்ள நிலையில், வருகை தரவுள்ள பக்தர்களின் வசதிக்காக உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளை ஏற்படுத்த இலங்கை கடற்படை தற்போது செயற்பட்டு வருகிறது.

கடற்படைத் தளபதியின் உத்தரவிற்கமைய,

15

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகால சட்டத்தை உடன் நீக்க வேண்டும்

## ரவூப் ஹக்கீம் எம். பி. வலியுறுத்தல்

கொழும்பு, பெப். 08

அரசாங்கம் சாதாரண சட்டத்தின் கீழ் செய்ய முடியுமான நடவடிக்கைகளையும்கூட, அவசரகால சட்டத்தை காரணம் காட்டி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருக்கிறது. அதனால், அவசரகால சட்டத்தை நீடிப்பதில் எந்தப் பயனும் இல்லை. அதனை நீக்கிக் கொள்ள வேண்டும் என்று சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற டித்வா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அவசரகால சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "அவசர அனர்த்த தேவையை மேற்கொள்ளவும் அத்தியாவசிய சேவை ஆணையாளர் ஒருவரை நியமித்துக் கொள்ளும் தேவை இருப்பதால் இந்த அவசரகால சட்டத்தை தொடர்ந்து நீடித்துக்கொள்ள தேவைப்படுவதாக அரசாங்கம் தெரிவிக்கிறது. என்றாலும் அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் கீழ் அனர்த்த நிலைமை ஒன்றை அறிவிப்பு செய்திருந் தால் இந்த விடயங்களை செய் வதற்கு அதில் இடவசதி இருக் கிறது.

அனர்த்த நிலைமைகளின் போது அவசரகால சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் அதனை தவறான முறையில் வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் அபாயம் இருப்பதால்தான் அனர்த்த முகாமைத்துவ சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால், அதனை பயன்படுத்தாமல், அவசரகால சட்டத்தை பயன்படுத்தி, பல்வேறு வகையில் அடக்குமுறைகளை மேற் கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்பதை நாங்கள் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருக்கி றோம்."- என்றார். (எ)

# அவசரகால சட்டத்தை நீடித்தது மக்களின் எதிர்ப்பை அடக்கவே

## கஜேந்திரகுமார் எம். பி. எதிர்ப்பு

கொழும்பு, பெப். 08

பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க அவசரகால சட்டம் அவசியமில்லை. ஆனால், இப்போது டித்வா காரணமாகவே அவசரகால சட்டம் தேவைப்படுகின்றது என்று கூறி எங்களை ஏமாற்ற முடியாது. நிச்சயமாக அரசியல் செயல்பாடுகளுக்கு மக்களிடையே வளரும் எதிர்ப்பை மறுப்பதற்கும் அதனை அடக்குவதற்கும் தேவைப்படும் அதிகாரமாகவே. இது பார்க்கப்படுகிறது. நாங்கள் இதற்கு எதிராகவே வாக்களிப்போம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "அவசரகால சட்டம் தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானத்தை நாங்கள் எதிர்ப்பதுடன், இது தொடர்பில் வாக்கெடுப்பை கோருவோம். இதன் போது இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வாக்களிப்போம். நாங்கள் இதனை ஏன் எதிர்க்க வேண்டும் என்பதற்கு தமிழர்களின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் புதிதாக பதிவு செய்ய தேவைப்படாது.

இப்போது கூட தையிட்டியில் நாங்கள் போராடும் போது பொலிஸார் வழமை போன்று நடவடிக்கை எடுக்கின்றனர். அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தியுள்ள காலத்தில் இதனை காட்டி நடவடிக்கை எடுக்கின்றனர். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை கொடூரமான சட்டம் இதனை நீக்கப் போகின்றோம் என்று கூறிக்கொண்டு இப்போது கிடைக்கும்ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வடக்கு மற்றும் கிழக்கில் அர சியல் ரீதியில் அரசாங்கத்தை எதிர்க்கும் போது இதனை பயன்படுத்துகின்றனர். இதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கின் றோம்."- என்றார்.

## மதுபோதையில் வாகனம் செலுத்திய 422 சாரதிகள் பொலிஸாரால் கைது!

கொழும்பு, பெப். 08

பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் நாளாந்த சோதனை நடவடிக்கைகளுக்கு அமைய, நேற்று முன்தினம் மாத்திரம் 27, 430 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் வெளியிட்ட ஊடக அறிக்கையின்படி, இந் தச் சோதனை நடவடிக்கைகளின் போது சந்தேகத்தின் பேரில் 524 பேர் கைது செய் யப்பட்டனர்.

அத்துடன், குற்றச்செயல்களுடன் நேரடியாக தொடர்புடையவர்கள் என்று அடையாளம் காணப்பட்ட 14 பேரும் கைது செய்யப்பட்டனர்.

மேலும், பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 309 பேரும் மற்றும் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 156 பேரும் இந்தச் சோதனைகளின் போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சோதனை நடவடிக்கைகளின் போது மது போதையில் வாகனம் செலுத்திய 422 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அஜாக்கிரதையாக வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 79 சாரதிகள் பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஏனைய போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பில் 4,826 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

பேராசிரியர் பிரதீபராஜாவுக்கு

# வானிலை வல்லோன் விருது வழங்கப்பட்டது



யாழ்ப்பாணம், பெப். 08

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் புவியியல்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜாவுக்கு "நம் மண்ணின் வானிலை வல்லோன்" எனும் கௌரவம் வழங்கப்பட்டுள் ளது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்க ின் இணையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் இணையத்தின் தலைவர் ந. சுகிர்தராஜ் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதன்போதே பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள் ளார். (எ-03)

## சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்களுக்கு பூட்டு

வவுனியா, பெப். 08

வவுனியா நகரில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய பிரபல உணவகங்கள் சுகாதார பரிசோதகர்களால் நேற்று முன்தினம் மூடப்பட்டன.

குறித்த உணவகங்கள் சுகாதார பரிசோதகர்களால், சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது, அவை சுகாதார சீர்கேட்டுடன் இருந்தமை அவதானிக்கப்பட்டன.

இதனையடுத்து குறித்த உணவகங்களை நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் திருத்தப்பணிகளுக்காக எதிர்வரும் 14 நாட்களுக்கு மூடுமாறு சுகாதார பரிசோதகர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கொறவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள இரு உணவகங்கள், பழைய பேருந்து நிலையப்பகுதியில் அமைந்துள்ள பிரபல சைவ உணவகம், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அலுவலகத்துக்கு அண்மையில் அமைந்துள்ள பிரபல உணவகங்களுக்கு எதிராகவே இவ் வாறு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. (எ-10)

# புங்குடுதீவில் வாள்களுடன் இளைஞர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 08

வேலணை - புங்குடுதீவு, வல்லன் பகுதியில் அபாயகரமான வாள்களுடன் நடமாடிய இளைஞர்கள் இருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், புங்குடுதீவு வல்லன் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போதே குறித்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து இரண்டு வாள்கள், ஒரு அபாயகரமான கோடாரி உள்ளிட்ட ஏனைய சில பொருட்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

புங்குடுதீவுப் பகுதியில் அண்மைக்காலமாக வன்முறைக் கும்பல்களின் அச்சுறுத்தல் அதிகரித்து வருகிறது. இதனால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

இந்த நிலையிலேயே பொலிஸார் இந்த அதிரடி நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# இனியாவது திண்மக் கழிவுகளை தரம்பிரித்து சேகரிக்க வேண்டும்

## சுற்றாடல் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 08

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் திண்மக் கழிவுகள் தொடர்பில் பொதுமக்களுக்கான போதியளவு விழிப்புணர்வு இருப்பதனால் கழிவு களை தரம்பிரித்து சேகரிக்க வேண்டும் என தீர்மானிக்கப் பட்டது.

யாழ். மாவட்ட சுற்றாடல் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்தோடு, யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள அரச, தனியார் நிறுவன திண்மக் கழிவுகளை தரம் பிரித்து வழங்குமாறும் மார்ச் முதலாம் திகதியிலிருந்து உள்ளூர் அதிகார சபையால் திண்மக் கழிவுகளை தரம் பிரித்து சேகரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

ஏதாவது திறந்த வெளியிடங்களில் எரியூட்டல் இடம் பெற்றால் 011, 258, 7124 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு முறைப்பாடுகளை அறிவிக்கும் சந்தர்ப்பத்தில் உடனடியாக சுற்றாடல் பொலிஸாரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் கூட்டத்தில் தெரிக்கப்பட்டது.

ஒலிபெருக்கி பாவனையால் அதிகப்படியான இடையூறு ஏற்படின், குறித்த பிரதேச கிராம உத்தியோகத்தர், பொது சுகாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் குறித்த விடயம் தொடர்பில் பிரதேச செயலாளருக்கு தகவல்களை வழங்குவதன் ஊடாக பிரதேச செயலாளர்கள் அதனை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025 இல் போதைப்பொருள் மற்றும் ஆயுத சுற்றிவளைப்புகள் அதிகரிப்பு

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

நுவரெலியா, பெப். 08

2025 இல் போதைப்பொருள் மற்றும் ஆயுத சுற்றிவளைப்புகள் அதிகரிப்பு 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025ஆம் ஆண்டில் பெருமளவிலான போதைப்பொருட்கள் மற்றும் ஆயுதங்களைக் கைப்பற்ற முடிந்துள்ளது என்று பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

நுவரெலியா- ஹற்றன் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த பொலிஸ் மா அதிபர், 2025ஆம் ஆண்டில் பொலிஸாரின் ஒட்டுமொத்த செயல்திறனை 50 வீதத்திலிருந்து 60 வீதம் வரை அதிகரிக்க முடிந்ததாக குறிப்பிட்டார்.

2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025ஆம் ஆண்டில் ஆயுதச் சோதனைகள் இரண்டு மடங்காகவும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகள் மூன்று மடங்காகவும் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது இலங்கை பொலிஸ் வரலாற்றில் பதிவான மிக உயர்ந்த மட்டம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைந்த போதிலும் தொடர்ச்சியான கண்காணிப்பு, உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு மற்றும் அவர்கள் செய்யும் பணிகளைச் சரியாக மதிப்பீடு செய்தமை காரணமாக பொலிஸ் சேவையின் செயல்திறனை உயர்



மட்டத்தில் பேண முடிந்ததாக பொலிஸ் மா அதிபர் கூறினார்.

அத்துடன், போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பான சட்ட அமுலாக்கம் மற்றும் ஏனைய குற்றப் புலனாய்வு நடவடிக்கைகளும் 60 வீதம் வரை வளர்ச்சியடைந்துள்ளதாகவும் அமைச்சரின் நேரடித் தலையீட்டின் மூலம் நீண்டகாலமாக நிலவிய உத்தியோகத்தர்களின் பிரச்னைகளைத் தீர்த்து 4,500இற்கும் மேற்பட்ட பதவி உயர்வுகளை வழங்க முடிந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(எ)

# பாறைக்கு அடியில் மறைத்த 44 கிலோ கஞ்சா கைப்பற்றல்

கொழும்பு, பெப். 08

ஹம்பேகமுவ - உடவலவ வனப்பகுதியில், பாறைக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா போதைப்பொருள் பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகளால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

தங்காலை பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இதன்போது, 44 கிலோ 600 கிராம் கஞ்சா அடங்கிய 03 உரப்பைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் குறித்து இது வரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை. ஹம்பேகமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# இத்தாலி பாதுகாப்பு ஆலோசகருடன் இலங்கை கடற்படை தளபதி சந்திப்பு

கொழும்பு, பெப். 08

இலங்கைக்கான இத்தாலிய பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் (கடற்படை) அர்மாண்டோ பவ்லோ சிமி, இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பனங்கொடவை உத்தியோகபூர்வமாக சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, இருதரப்பு நலன்கள் குறித்து இருவரும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை இருவரும் நினைவு கூர்ந்தனர். (எ)

# அம்பாறை, மட்டக்களப்பில் அவ்வப்போது மழை பெய்யும்

கொழும்பு, பெப். 08

ஊவா மாகாணத்திலும் மாத்தளை, நுவரெலியா, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் பல தடவைகள் மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் 02. 00 மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்பதுடன் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிக ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மாத்தளை, திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் பதுளை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டம் காணப்படலாம்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக ஏற்படக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.(எ)

# பீடி இலைகளுடன் இருவர் கைது!

கொழும்பு, பெப். 08

துங்கல்பிட்டிய - தெற்கு பிட்டிபன பகுதியில், சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட பீடி இலைகளுடன் இரண்டு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.


துங்கல்பிட்டிய பொலிஸார் மற்றும் நீர்கொழும்பு பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகத்தினர் இணைந்து நடத்திய சோதனையின்போதே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்து, 969 கிலோ 100 கிராம் பீடி இலைகள் கொண்ட 32 பைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மற்றைய சந்தேகநபரிடமிருந்து, 897 கிலோ 700 கிராம் பீடி இலைகள் கொண்ட 28 பைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

(எ)

# 3 ரொக்கெட் லோஞ்சர்கள் மட்டக்களப்பில் மீட்பு



மட்டக்களப்பு, பெப். 08

மட்டக்களப்பு, குடும்பிமலைப் பகுதியில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த சுவீடன் நாட்டுத் தயாரிப்பான மூன்று ரொக்கெட் லோஞ்சர் ரக ஆயுதங்கள் நேற்று முன்தினம் மாலை விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலநறுவை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, குடும்பிமலைப் பகுதியில் அரங்கலாவ விசேட அதிரடிப் படையினரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மீட்கப்பட்ட ஆயுதங்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# பெண்கள், சிறுவர்கள் நலனுக்காக ஒருங்கிணைந்து செயல்படுங்கள்

## அமைச்சர் சரோஜா ஆலோசனை

பதுளை, பெப். 08

தனித் தனியாக செயல்படாமல், பெண்கள் மற்றும் சிறுவர்கள் நலனுக்காக ஒருங்கிணைந்த அலகாக இணைந்து செயல்படுவது மிகவும் அவசியம் என்று மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பதுளை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்துடன் இணைந்ததாக மகளிர் மற்றும் சிறுவர் துணைக் குழு அமைப்பது தொடர்பான கூட்டம் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தலைமையில் பதுளை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வெளிக்கள உத்தியோகத்தர்களின் முக்கிய பொறுப்பு அபாயங்களை முன்கூட்டியே இனங் காண்பதாகவும் அதன் மூலம் பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமை மீறல்கள், குற்றச்செயல்கள் மற்றும் ஆபத்தான நிலைகளைத் தடுப்பதற்கு முடியும் என்றும் அமைச்சர் விளக்கினார்.

அதேநேரத்தில், தொடர்ச்சியான பின்னூட்டல் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் மீண்டும் பாதிப்புக்குள்ளாகாமல் தடுப்பது, பாதுகாப்பு மற்றும் நலச் சேவைகளை செயல்திறனுடன் வழங்குவது மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வது ஆகிய இலக்குகளை அடைய முடியும் என்றும் தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்தில் 'டித்வா' சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்டு தாய், தந்தை மற்றும் தாய் அல்லது தந்தையை இழந்த 28 குழந்தைகள் பதிவாகியுள்ளன.

அவற்றில் இரண்டு குடும்பங்களில் தாய் மற்றும் தந்தை இருவரையும் இழந்த 5 குழந்தைகள் உள்ளதால் அந்தக் குழந்தைகளுக்கான பராமரிப்பு திட்டங்களை தயாரித்து எதிர் கால தலையீடுகளை மேற் கொள்ள சிறுவர் உரிமை அபி விருத்தி உத்தியோகத்தர்களுக்கு அமைச்சர் ஆலாசனை வழங்கினார்.

(எ).

குப்பைகளை வீதிகளில் வீசுபவர்களால்

# கண்காணிப்பு கமராக்களை பூட்டி அவதானிக்கும் துர்ப்பாக்கிய நிலை

யாழ்ப்பாணம், பெப். 08

வீதிகளில்குப்பைகளை பொறுப்பற்ற முறையில் வீசுபவர்களால் உள்ளூராட்சி மன்றங்கள் கண்காணிப்பு கமராக்களைப் பூட்டி அவதானிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள் ளது என்று அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரி வித்தார்.

மாவட்ட சுற்றாடல் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர் கூறுகையில், திண்மக்கழிவகற்றல் பொறிமுறை சிறப்பாக இருத்தல் வேண்டும். அதற்கு பொதுமக்களின் விழிப்புணர்வு செயல்பாடுகள் தேவைப்படுகின் றன. குப்பைகளை வீதிகளில் பொறுப்பற்ற முறையில் வீசுப வர்களை கண்காணிப்பதற்கு- உள்ளூராட்சி மன்றங்கள் கண்காணிப்பு கமராக்களை பூட்டி அவதானிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள் ளது-என்றார். மேலும், பிரதேச செயலகங்களில் கிராம மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் சுற்றாடலுடன் தொடர்புடைய உத்தி யோகத்தர்கள் இருப்பதனால் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து ஒருங்கிணைந்த செயல் பாடுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர்களுக்கு உரிய அறிவு றுத்தல்கள் அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை தீவிரமாக காதலிக்கும் அரசாங்கம்

## சாமர சம்பத் எம். பி. சாடல்



கொழும்பு, பெப். 08

கடந்த கால அரசாங்கங்களை காட்டிலும் இந்தியாவை தீவிர மாக காதலிக்கும் அரசாங்கமாக அநுரகுமார அரசாங்கமே உள் ளது. இந்தியாவின் விருப்பு, வெறுப்புக்கு அமையவே அரசாங் கம் செயல்படுகிறது. இவர்களுக்கு வெட்கமில்லையா? என்று பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுமக்கள் பாதுகாப்பு கட்ட ளைச் சட்டத்தின் அமுல்படுத் தப்பட்ட அவசரகால சட்டம் தொடர்பான விவாதத்தில் உரை யாற்றுகையில் அவர் மேற்கண் டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது,

"இந்தியாவுக்கு எதிராக இந் திய எதிர்ப்பு மாதத்தை அனுஷ் டித்தவர்களுக்கு இன்று இந்தியா இல்லாமல் எதுவுமே இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டை ஆட்சி செய்த ஜே. ஆர். ஜெயவர்தன, ஆர். பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, மைத் திரிபால சிறிசேன, ரணில் விக்கி ரமசிங்க ஆகியோரை விட அநு ரகுமார திஸநாயக்க அரசாங் கமே இந்தியாவை தீவிரமாக காதலிக்கிறது.

ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தற் போது இந்தியாவில் குதூகலம் அனுபவிக்கின்றார். ஜனாதிபதி யும் இந்தியா செல்லவுள்ளார். இன்று இவர்களுக்கு எல்லாமே இந்தியாதான். உங்களுக்கு வெட் கமில்லையா? உங்களால் கொல் லப்பட்டவர்கள், உங்களுக்காக உயிர்கொடுத்தவர்கள் உங்களின் இந்திய ஆதரவை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் பதில் சொல்ல வேண்டி வரும்"- என்றார். (எ)

# பெண் எம். பிக்களுக்கு எதிரான அவமதிப்புகளை தடுக்க யோசனை

கொழும்பு, பெப். 08

பெண் பாராளுமன்ற உறுப் பினர்களை வாய்மொழியாக துஷ்பிரயோகம் அல்லது அவ மதிப்புக்கு உள்ளாக்கும் வகை யிலான பாராளுமன்ற உறுப் பினர்களின் நடத்தை அல்லது கூற்றுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளையை திருத் துமாறு பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதிக எண்ணிக்கையிலான பெண் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றமாக பத்தாவது பாராளுமன்றம் திகழ்கிறது.

பிரதிநிதித்துவ ஜனநாயகம் கொண்ட ஒரு நாட்டில் மக்க ளால் தெரிவு செய்யப்பட்ட பிர திநிதிகளாக, அவர்கள் பாராளு மன்ற சபைக்கு உள்ளேயும் வெளியேயும் தங்கள் கடமைக ளைச் செய்கிறார்கள்.

பெண் பாராளுமன்ற உறுப் பினர்கள் ஒன்றியம் மற்றும் "பாலின அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான 16 நாட்கள் செயல்பாட்டின்" ஒரு பகுதியாக ஆண்டுதோறும் "செம்மஞ்சள் தினம்" போன்ற அடையாள நிகழ்வுகளை நாங் கள் நடத்தியிருந்தாலும், இந்த சபையின் செயல்பாடுகள் மூலம் அவற்றை அர்த்தமுள்ள வகை யில் விளக்க முடியவில்லை என்பது தமது அவதானிப்பா கும் என்று பெண் பாராளுமன்ற ஒன்றியத்தின் தலைவியும் மக ளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சருமான சரோஜா சாவித்திரி போல்ராஜ் உள்ளிட்ட ஒன்றியத்தின் உறுப்பினர்கள் கையொப்பமிட்டு கையளித் துள்ள கோரிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது. (எ)



# கனிம அகழ்வு உரிமங்கள் தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, பெப். 08

புதிய தேசிய கனிமக் கொள்கை அறிமுகப்படுத்தப்படும் வரை கனரக அளவிலான கனிம அகழ்வு உரிமங்களை வழங்குவதைத் தற்காலிகமாக நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவிய லாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய தேசிய கனிமக் கொள் கைக்கு அமைச்சரவை அங்கீ காரத்தைப் பெற்று, பாராளுமன் றத்தின் ஊடாக நிறைவேற்றிச் செயல்படுத்த எதிர்பார்க்கப்படு கிறது.

அதுவரை கட்டுமானத் துறைக்குத் தேவையான மூலப் பொருட்களைத் தவிர, ஏனைய அனைத்து கனிம அகழ்வு உரி மங்களையும் வழங்குவதைத் தற் காலிகமாக நிறுத்துவதற்கு அர சாங்கம் தீர்மானித்துள்ளது.

வீடமைப்பு மற்றும் கட்டு மானத் துறைக்கு அத்தியாவ சியமான மணல் மற்றும் கற்கள் போன்ற பொருட்களுக்கு இந் தத் தடை பொருந்தாது.

இல்மனைட், ரூடைல், சிர் கோன் மற்றும் கார்னட் போன்ற கனிய மணல்களுக்கான அனை த்து ஆய்வு மற்றும் அகழ்வு உரிமங்களை வழங்குவது புதிய கொள்கை வெளியாகும் வரை நிறுத்தப்பட்டுள்ளது- என்றார். (எ)

# லொறி மோதி பாடசாலை மாணவி பலி

கொழும்பு, பெப். 08

வீதியோரமாக சென்று கொண் டிருந்த பாடசாலை மாணவி ஒரு வர் லொறி மோதி இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தார்.

எலபாத்த பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ரப்பர் தோட்டத்துக்கு அருகில் நேற்று முன்தினம் நண் பகல் இந்த விபத்து இடம்பெற் றது.

விபத்தில் காயமடைந்த மாணவி இரத்தினபுரி மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த மாணவி அலகெட் டிய பிரதேசத்தை சேர்ந்த 11 வயதுடையவர் என தெரிவிக்கப் படுகிறது.

விபத்து தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கரைவலை மீனவர்கள் ஆரம்பித்த சத்தியாக்கிரக போராட்டம் நீடிப்பு

கொழும்பு, பெப். 08

உழவியந்திரங்களுடன் பொரு த்தப்பட்ட வின்ச் இயந்திரங்க ளைப் பயன்படுத்தி மேற்கொள் ளப்படும் கரைவலை மீன்பிடி நடவடிக்கைகளுக்கு விதிக்கப் பட்டுள்ள தடையை நீக்கக் கோரி மீனவர்கள் ஆரம்பித்த சத்தியாக் கிரகப் போராட்டம் நேற்று மூன் றாவது நாளாகவும் நீடித்தது.

முல்லைத்தீவு மற்றும் கொக் கிளாய் உள்ளிட்ட பல பகுதிக ளைச் சேர்ந்த கரைவலை மீன வர்கள் கடந்த 5ஆம் திகதி ஜனா திபதி செயலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டத்தை ஆரம் பித்தனர்.

தமது பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி மக்கள் தொடர்பு பணிப்பாளர் நாயகம் தர்மசிறி கமகேவுடன் நடத்திய பேச்சு வார்த்தை தோல்வியடைந்ததை அடுத்து, நேற்று முன்தினம் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை யைச் சந்தித்து தமது கோரிக்கை களை முன்வைத்தனர்.

அத்துடன், கடற்றொழில் அமைச்சின் செயலாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோ ருடன் நேற்று முன்தினம் மாலை மீனவர்கள் நடத்திய பேச்சுவார் த்தையும் தோல்வியில் முடிவ டைந்தது. இந்த நிலையிலேயே மீனவர்களின் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. (எ)

# போட்டி போட்டு ஓடிய பேருந்துகள்

## கஞ்சா சாரதி கைது

களுத்துறை, பெப். 08

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெட்டும கடை சந்தியில் அதிவேகமாக ஒன்றுடன் ஒன்று போட்டியிட் டுச் சென்ற இரண்டு பேருந் துகள் விபத்துக்குள்ளாகின.

பேருந்து சாரதிகளில் ஒருவர் மீது பொலிஸாருக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் பேரில், அவர் களுத்துறை போதனா மருத்து வமனையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்ப டுத்தப்பட்டார்.

இதன்போது அவர் கஞ்சா போதைக்கு அடிமையானவர் என்பது கண்டறியப்பட்டுள் ளது.

இதற்கமைய, குறித்த சாரதி களுத்துறை தெற்கு பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள் ளார்.

இவ்வாறு கைது செய்யப் பட்டவர் காலி பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது. (எ)

# கெஹலியவின் மகள் சமித்ரிக்கு பிணை!

கொழும்பு, பெப். 08

முன்னாள் அமைச்சர் கெஹெ லிய ரம்புக்வெலவின் மகளான சமித்ரி ரம்புக்வெலவை பிணை யில் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை உத்தர விட்டுள்ளார்.

3 கோடி ரூபாய் பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டு தொடர்பில் கெஹலியவின் மகள் சமித்ரி ரம்புக்வெல இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் வெள்ளிக்கிழமை கைது செய்யப் பட்டார்.

கைது செய்யப்பட்ட சமித்ரி ரம்புக்வெல கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப டுத்தப்பட்டதையடுத்து 5 மில் லியன் ரூபாய் பெறுமதியுடைய சரீர பிணையில் விடுவிக்கப்பட் டுள்ளார். (எ)

# வீதியில் யானைகள் சண்டை: அச்சத்தில் பிரதேசவாசிகள்

தம்புள்ளை, பெப். 08

தம்புள்ளை - ஹபரணை பிர தான வீதியில் திகம்பதஹா பிர தேசத்தில் இரண்டு காட்டு யானைகள் நடுவீதியில் சண்டை யிட்டுக்கொண்டிருந்ததாக பிர தேசவாசிகள் தெரிவித்தனர்.

இதனால் பிரதேசவாசிகளும் வாகனங்களில் பயணித்தவர்க ளும் அச்சத்தில் இருந்துள்ளனர்.

இதன் காரணமாக அப்பகு தியில் போக்குவரத்து பாதிக்கப் பட்டதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

திகம்பதஹா பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகா சம் அதிகரித்துள்ளதாகவும் பிர தேசவாசிகள் தெரிவித்தனர். (எ)



# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இணுவில் துர்க்கா அணி சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 08

மானிப்பாய், கட்டுடை விநா யகர் விளையாட்டு கழகம் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளை கழக மைதானத்தில் நடத்தியது.

போட்டிகளின் இறுதிச் சுற்று நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதன்படி, இறு திப் போட்டி யில் உடுவில் அம் பாள் விளை யாட்டு கழக ஏ அணியை வெற்றி கொண்டு இணுவில் துர்க்கா விளை யாட்டு கழகம் சம்பியனானது.

மூன்றாம் இடத்தை உடுவில் அம்மாள் பி அணியும் நான்காம் இடத்தை பிள்ளையார் விளை யாட்டு கழகமும் பெற்றது.

கழக தலைவர் மகிந்தன் தலைமையில் நடைபெற இந்த நிகழ்வில் மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் கலைக் கண நாதன் உஷாந்தன் விருந்தினராக கலந்து கொண்டு வெற்றிக் கேட யங்கள், பதக்கங்கள், பணப் பரிசில்களை வழங்கினார்.

நிகழ்வில் ஊர் மக்கள், விளை யாட்டு வீரர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
08.02.2026 ஞாயிற்றுக்கிழமை

விசுவாவசு வருடம், தை 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# என்று தீரும் இந்த அறியாமை?

தமிழ் மக்கள் தீர்வைப் பெறுவற்கு பிரித்தானியா உதவவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன், இலங்கைக்கான பிரித்தானிய தூதுவரிடம் கோரிக்கை முன்வைத்திருக்கின்றார். மனோ கணேசன் மட்டுமல்ல 90 விகிதமான தமிழ் பேசும் அரசியல்வாதிகள் நிலைமைகளை ஆராய்ந்து, விடயங்களை புரிந்து பேசுவதில்லை.

மனோ கணேசன் பிரித்தானிய தூதுவரிடம் தமிழ் மக்களுக்கான தீர்வுக்காக பேசுமாறு கூறும் அதேவேளை மனோ கணேசன் அங்கம் வகித்துவரும் கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாஸ காலனித்துவ காலத்தில் நாட்டுக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கு பிரித்தானியாவிடம் (காலனித்துவ நாடுகளிடம்) நட்டஈட்டைக் கோரவேண்டும் என்று, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுகின்றார். ஆபிரிக்க நாடுகளை இந்த விடயத்தில் அரசாங்கம் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கின்றார்.

சஜித்தின் ஆலோசனைக்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், அவ்வாறான விடயத்தை தாங்கள் மேற்கொள்ளவுள்ளதாக கூறியிருக்கின்றார் - அதாவது, காலனித்துவ காலத்தில் இலங்கையிலிருந்து பிரித்தானியா மற்றும் ஏனைய நாடுகள் அபகரித்த சொத்துக்கள் மற்றும் காலனித்துவ ஆட்சியின்போது இலங்கைக்கு ஏற்பட்ட சேதங்கள் ஆகியவற்றுக்கு நட்டஈட்டை அரசாங்கம் கோரவுள்ளது.

இந்தப் பின்புலத்தில், பிரித்தானியாவை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப் போவதாக அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கும்போது, அந்த பிரித்தானியாவிடம் தீர்வை அரசியல் தீர்வை கோருகின்றார்கள் தமிழ் அரசியல்வாதிகள். மனோ கணேசன் போன்றவர்கள் அரசாங்கத்தை செவிமடுக்காதுவிட்டாலும் கூட, ஆகக் குறைந்தது தான் அங்கம் வகித்து வரும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் தலைவர் என்ன கூறுகின்றார் என்பதையாவது செவிமடுக்க வேண்டும்.

ஐரோப்பிய நாடுகளிடம் மற்றும் அமெரிக்காவிடம் தமிழ் மக்களுக்கு தீர்வு தாருங்கள் என்று கூறுவதை தமிழ் அரசியல்வாதிகள் மந்திரம் போன்று உச்சரித்துக் கொண்டிருக்கின்றனர். முதலில் அதனை கைவிட வேண்டும். உலகில் என்ன நடக்கின்றது என்பதை உற்று நோக்க வேண்டும். உலகம் இன்று சென்று கொண்டிருக்கும் திசையின் வழியில் இதுவரையில் ஓரணியாக இருந்த மேற்குலகமே ஒன்றாக இல்லை.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க நிர்வாகமோ, இதுவரையில் உலகம் கண்ட அணுகுமுறைகள், நம்பிக்கைகள் பலவற்றை கேள்விக்குள்ளாகிவிட்டது. இந்தப் பின்புலத்தில் மூன்றாம் உலக நாடுகள் மீதான மேற்குலகின் தலையீடுகள் என்பவை முன்னரை விடவும் மேலும் பலவீனமடைந்திருக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபை அரசியல் ரீதியில் மிகவும் பலவீனமான நிலையை அடைந்திருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் மேற்குலக தூதரங்களின் இராஜதந்திரிகளை சந்திக்கும்போது, அரசியல் பற்றிப் பேசுவதை விடுத்து, தாங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் பேசுவது தான் உசிதமானதும் புத்திசாதுரியமானதுமாகும். ஆகக் குறைந்தது சில நன்மைகளையாவது அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் அதற்கு பதிலாக அரசியல் தீர்வு பற்றிப் பேசினால் கிடைக்கக் கூடிய பொருளாதார நன்மைகளைக் கூட பெற முடியாது போய்விடும்.

# பாரம்பரியக் கலையைக் கற்பதில் எமது இளம் தலைமுறையினர் காட்டும் ஆர்வம்

## வடக்கு மாகாண ஆளுநர் பாராட்டு



*யாழ்ப்பாணம், பெப். 08*

தமிழரின் பண்பாடு மற்றும் கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கும் கலை வடிவங்களில் பரதநாட்டியம் முதன்மையானது. சிவபெருமானின் ஆனந்த தாண்டவம் மற்றும் ருத்ர தாண்டவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய பாரம்பரியக் கலையைக் கற்பதில் எமது இளம் தலைமுறையினர் காட்டும் ஆர்வம், எமது கலை, கலாசாரத்தின் இருப்பை உறுதி செய்கின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பொன்னாலை சந்திர பரத கலாலயத்தின் இயக்குநர் திருமதி சிறீதேவி கண்ணதாசன் அவர்களின் மாணவியும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் தரம் 11 மாணவியுமான செல்வி லக்ஸ்மிகா திஸாகரனின் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வு, நேற்று சனிக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தின் முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) கா.சந்திரபாலன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கல்வி பயிலும் செல்வி லக்ஸ்மிகா திஸாகரனின் குடும்பப் பின்னணியை நான் நன்கறிவேன். கலைகளின் பால் ஈர்க்கப்பட்ட குடும்பத்திலிருந்து வந்த இவர், தனது கல்வியுடன் இணைந்ததாக, கடுமையான அர்ப்பணிப்புடன் இக்கலையை முறையாகப் பயின்று இன்று அரங்கேற்றம் செய்வது பாராட்டத்தக்கது.

இவரது குரு திருமதி ஶ்ரீதேவி கண்ணதாசன் மிகச் சிறந்த கலைஞர். அவரது நடன நிகழ்வுகள் எப்போதும் தரம் வாய்ந்தவை. அவரது தந்தையாரும் சிறந்ததொரு நிர்வாகி. அத்தகைய குருவிடம் பயின்ற மாணவியான லக்ஸ்மிகாவின் ஆற்றுகை, இன்று ஒரு "அரங்கேற்றம்" என்பதைத் தாண்டி, முதிர்ச்சியானதொரு கலைஞரின் ஆற்றுகையைப் போன்று பிரமிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

சிவபெருமான் ஆனந்தமாக இருக்கும்போது "ஆனந்த தாண்டவமும்", சீற்றத்துடன் இருக்கும் போது "ருத்ர தாண்டவமும்" ஆடுவார் என புராணங்கள் கூறுகின்றன. அந்தச் சிவனை மையப்படுத்திய அவரின் நடன வடிவத்தை அடிப்படையாகக் கொண்டே இந்தப் பரதநாட்டியக் கலையும் அமைந்திருக்கின்றது. அத்தகைய தெய்வீகக் கலையை எமது பிள்ளைகள் தொடர்வது மகிழ்ச்சியளிக்கின்றது.

இலங்கையில் பரதநாட்டியத்தைப் பயிலும் மாணவர்களின் கற்றல் அனுபவங்களை விரிவுபடுத்தும் வகையில், மகரகம தேசிய கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள "பரதநாட்டியம்" எனும் வாசிப்புத் துணைநூல் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். மாணவர்கள் இந்நூலில் உள்ள விடயங்களைத் தமதாக்கிக் கொண்டு, இத்துறையில் இன்னும் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவனேசன் உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள், மதகுருமார்கள், கல்விமான்கள், கலைஞர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# போதைப்பொருட்களுடன் 2 இளைஞர்கள் கைது!

*யாழ்ப்பாணம், பெப். 08*

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரு வெவ்வேறு பகுதிகளில் போதைப் பொருட்களுடன் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மயிலணி பகுதியில் வைத்து 10 கிராம் ஐஸ் போதைப் பொருட்களுடன் 27 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக ஏற்கனவே மல்லாகம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மயிலங்காடு பகுதியில் வைத்து 100 போதை மாத்திரைகளுடன் 31 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராகவும் ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விட்டுக் கொடுத்தால் உறவு வலுப்படும்!

- அனந்தபத்மநாபன்

இந்தியாவின் புணே நகரில் அண்மையில் நிகழ்ந்த ஒரு விவாகரத்து வழக்கு,இன்றைய சமூக மாற்றத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. சுமார் 2 ஆண்டுகள் காதலித்த இருவர் திருமணம் செய்து கொண்டனர். மணமகள் மருத்துவர், மணமகன் பொறியாளர். ஆனால், திருமணம் முடிந்த 24 மணி நேரத்திலேயே அவர்கள் பிரிய முடிவெடுத்து நீதிமன்றம் சென்றனர்.

கணவர் கப்பலில் வேலை பார்ப்பதால் ஏற்படும் நிச்சயமற்ற சூழல் குறித்து காதலிக்கும் காலத்தில் அவர்கள் கவனிக்கத் தவறினர். இந்த எதார்த்தமான சிக்கல், திருமணமான ஒரே நாளில் அவர்களுக்குள் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

யாரைத் திருமணம் செய்ய வேண்டும் என்பது தனிப்பட்ட விருப்பமாக இருந்தாலும், திருமணம் செய்து கொண்டபிறகு, அந்த உறவு சமுதாய ஒழுங்கமைப்பின் அடிப்படை அங்கமாக மாறிவிடுவதாக நீதித்துறை கருதுகிறது. விவாகரத்து என்பது வெறும் சாதாரண ஒப்பந்தம் அல்ல. சட்டம் இதை வெறும் இருவர் சம்மதம் என்று பார்க்காமல், நீதிமன்றத்தின் சம்மதம் அவசியமான ஒரு பொது விவகாரமாக அணுகுகிறது.

இருப்பினும், விவாகரத்து என்பது வாழ்வின் முடிவல்ல. அது ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கம். அமெரிக்க எழுத்தாளரான எலிசபெத் கில்பர்ட், தனது 31-ஆவது வயதில் ஒரு கடுமையான விவாகரத்தைச் சந்தித்து நிலைகுலைந்த பிறகு, பயணம் மற்றும் கலாசார அறிமுகங்கள் மூலம் தனது மனக்காயங்களுக்குத் தீர்வு கண்டார்.

சர்வதேச அளவில் விவாகரத்துப் போக்குகளை ஆராயும்போது, வளர்ந்த நாடுகளில் ஒரு விசித்திரமான மாற்றம் தென்படுகிறது.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் ஒட்டுமொத்த பிரிவுகள் குறைந்திருந்தாலும், ஐம்பது வயதைக் கடந்தவர்களிடையே ஏற்படும் "நரைத்த கால விவாகரத்து" எனும் போக்கு கடந்த இருபது ஆண்டு களில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. ஜான் ஹென்டர்சன்,



சார்லோட் ஹென்டர்சன் போன்ற நீண்ட காலத் தம்பதிகள் 80 ஆண்டுகளுக்கும் மேலாக இணைந்து வாழ்ந்த கின்னஸ் சாதனைகள் நமக்கு நம்பிக்கையூட்டினாலும், இன்றைய சூழலில் தனிமனிதத் தேவைகள் எத்தகைய மாற்றங்களைச் சந்தித்துள்ளன என்பதற்கு இப்போக்குகளே சாட்சி.

இந்தியா, சீனாவில் பொருளாதார மேம்பாடு, பெண்களின் கல்வி அறிவு வளர்ச்சியால், பாரம்பரியக் குடும்பக் கட்டமைப்புகள் மறுபரிசீலனை செய்யப்படுகின்றன. குறிப்பாக,பொருளாதாரச் சுதந்திரம் பெற்ற பெண்கள், சமத்துவமற்ற உறவுகளில் இருந்து விவாகரத்து பெற்று வெளியேறுவதை தங்களின் உரிமையாகக் கருதுகின்றனர். இது வெறும் பிரிவாக மட்டுமன்றி, காலங்கால மாகப் பெண்களின் மீது சுமத்தப்பட்டி ருந்த "சகிப்புத் தன்மை" எனும் பிம்பம் உடைவதையும் காட்டுகிறது.

வளைகுடா நாடுகளிலும்கூட நவீனமயமாக்கலின் விளைவாகத் திருமணமான குறுகிய காலத்திலேயே விவாகரத்து செய்யும் தம்பதிகளின் விகிதம் அதிகரித்து வருவது, தனிமனித உரிமைகள், சுதந்திரம் குறித்த விழிப்புணர்வு எல்லைகளைத் தாண்டிப் பரவி வருவதை உறுதிப்படுத்துகிறது.

குடும்ப அமைப்பில் ஏற்படும் இத்தகைய விரிசல்கள் வெறும் தனிநபர் சார்ந்தவை மட்டுமல்ல, அவை ஒரு சமூகத்தின் கூட்டுப் பொறுப்பையும் தட்டியெழுப்புகின்றன.

திருமணத்துக்கு முந்தைய ஆலோசனைகள் இன்று ஆடம்பரமாகப் பார்க்கப்படாமல், அவசியமான தேவையாக மாறவேண்டும். உறவுகளுக்குள் நுழையும் முன்பே ஒருவருக்கொருவர் கொண்டுள்ள எதிர் பார்ப்புகள், பொருளாதாரத் திட்டமிடல், பணிச் சூழல் சார்ந்த சவால்களை வெளிப்படையாக விவாதிப்பது அவசியம்.

உறவுகளில் விரிசல் ஏற்பட முக்கியக் காரணம் தம்பதிகளிடையே குறைந்துவரும் நேரடி உரையாடல்களே. மின்னணு சாதனங்களின் பயன்பாட்டால் தம்பதிகள் நேரில் பேசும் நேரம் 45 வீதம் குறைந்துவிட்டது.

தினமும் ஒரு 30 நிமிஷமாவது கைப்பேசியை ஒதுக்கி வைத்துவிட்டு மனம் விட்டுப் பேசும் பழக்கம் ஆரோக்கியமான உறவுக்கு வழிவகுக்கும்.

இன்றைய மின்னுலகக் காலத்தில் தம்பதியர் அருகருகே அமர்ந்திருந்தாலும், ஆளுக்கொரு கைப்பேசியில் மூழ்கிக் கிடப்பதால் துணையின் உணர்வுகளைவிட, முன்பின் தெரியாதவர்களின் விருப்பக்குறிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. திரையிலிருந்து இதயத்துக்கு மாற வேண்டும்.

திருமண வாழ்வின் வெற்றி என்பது சண்டைகளே இல்லாத சூழலில் இல்லை. மாறாக, சண்டைகளுக்குப் பிறகு எப்படி ஒருவரை ஒருவர் மீண்டும் ஏற்றுக் கொள்கிறோம் என்பதில்தான் இருக்கிறது.

பிடிவாதம் என்பது ஒருவரை வெல்லப் பயன்படலாம் ஆனால், ஓர் உறவை வெல்ல விட்டுக்கொடுத்தல் மட்டுமே உதவும்.

(தினமணி)

# இந்தவார ராசிபலன் 07.02.2026 - 14.02.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - தை 25
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சப்தமி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மேன்மையான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை அனுபவம் நிறைந்ததாக இருக்கும், சில இடங்களில் வேலையில் பொறுப்பு அதிகமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில மாறுதல்களை எதிர்பார்க்கலாம், புதிய முயற்சிகளில் நம்பிக்கையாக ஈடுபடும் நேரம்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை எதிர்பார்த்த மாதிரி நடக்கும். சில இடங்களில் அழுத்தம் இல்லாமல் இருக்கும். உத்தியோக ரீதியாக இருந்த சிக்கல்கள் விலகலாம், ஆனால் எதிர்பார்த்த காரியம் தடையில்லாமல் நடக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்கும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சற்று சாதகமற்ற பலன்கள் நடக்கும். சில இடங்களில் வேலை அழுத்தம் அதிகமாக இருக்கும், சில இடங்களில் போராட்டமாக இருக்கும். குடும்பத்தில் இருந்து வந்த முரண்பாடுகள் விலகி அமைதி உண்டாகும், பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக ஏற்றம் இறக்கமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் பிரச்சனைகளை சந்திக்கலாம் , சில இடங்களில் அதிக உழைப்பை போட வேண்டும்.புதிய முயற்சிகளில் கவனமாக ஈடுபடலாம். குடும்பத்தில் உறவினர்களால் சங்கடம் வரலாம்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் நன்மை தீமை கலந்த பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் கடுமையாக இருக்கும், சில இடங்களில் போராட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில மாற்றங்கள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். புதிய முயற்சிகளுக்கு வெற்றிகரமான நேரம்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வெற்றிகரமாக இருக்கும். சில இடங்களில் சவாலாக இருக்கும். புதிய திட்டங்களுக்கு சிறப்பான நேரம் இது. குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் விலகும், பிள்ளைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் அதிகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் போராட்டமாக இருக்கும். சில இடங்களில் வேலையில் சவாலாக இருக்கும். உத்தியோகத்தில் சில மாறுதல்கள் வரலாம். ஆனால் எதிர்பார்த்த உத்தியோக உயர்வு தள்ளிப் போகலாம்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை சுமையாக இருக்கும் , சில இடங்களில் சுவையாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி மாற்றம் வரலாம், பிள்ளைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் நன்மையான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை கடினமாக இருக்கும் , சில இடங்களில் சுலபமாக இருக்கும். உத்தியோக ரீதியாக உயர்வும் செல்வாக்கும் கிடைக்கும், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தள்ளி போகலாம்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக அதிகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டமாக இருக்கும் , சில இடங்களில் நேர்த்தியாக இருக்கும். புதிய முயற்சிகளில் கவனமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சிரமங்கள் குறையும், பிள்ளைகளால் நிம்மதி உண்டாகும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிதமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் அழுத்தம் இருக்கும் , சில இடங்களில் சவாலாக இருக்கும். மூலதனத்தை அதிகரிக்க தகுந்த நேரம் இது. குடும்பத்தில் இருந்து வந்த மன முரண்பாடுகள் விலகும், பிள்ளைகளால் செலவுகள் வரலாம்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மிதமான பலன்கள் இருக்கும் . சில இடங்களில் வேலையில் அழுத்தம் இல்லாமல் இருக்கும் , சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் வருமானமும் அதிகரிக்கும், பிள்ளைகளால் மன நிம்மதி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசு எதைநோக்கி செல்கிறது: சிறிதரன் மௌனம் கலைப்பாரா?

நல்லூரான்

அண்மையில் டான்ரிவி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச்செயலாளர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் தெரிவித்திருந்த ஒரு தகவல் பற்றி மூத்த பத்திரிகையாளர் ஒருவர் அண்மையில் பிரஸ்தாபித்திருந்தார்.

சில வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்காவை தமிழ் அரசுக்கட்சியினர் சந்தித்திருந்தனர். அந்தச் சந்திப்பின்போது தாங்கள் கடந்த அறுபது வருடங்களாக சம்ஷ்டித்தீர்வு பற்றி வலியுறுத்தி வருவதாகவும், இதுவரை ஆட்சியிலிருந்த அரசுகள் எவையும் தமது கோரிக்கையை கண்டுகொள்ளவில்லை என்றும் தமிழ் அரசு கட்சியினர் ஜனாதிபதியிடம் கூறியபோது அவர் திரும்பிக் கேட்ட கேள்வி ஒன்று பற்றி சுமந்திரன் அந்தப் பேட்டியில் தெரிவித்திருந்தார்.

“அறுபது வருடங்களாக ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் எதுவும் தராத தீர்வு ஒன்றை இந்த அரசாங்கம் (அதாவது தனது அரசாங்கம்) தரும் என்று நம்புகின்றீர்களா?”.

இதுதான் ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க தமிழ் அரசுக் காரர்களைப் பார்த்துக் கேட்ட கேள்வி. இதற்குப்பின்னரும், சரி ‘உங்களால் தரக்கூடிய தீர்வு பற்றி பேசலாம்’ என்று அவர்கள் சொல்லுவார்கள் என்பது ஜனாதிபதி அனுரவின் எதிர்பார்ப்பாக இருக்கலாம். ஆனால் இதனை நிச்சயம் தமிழ் அரசுக்காரர்கள் புரிந்துகொண்டிருக்க வாய்ப்பு இல்லை.

எங்கே நாங்கள் சமஷ்டி இல்லாத தீர்வு ஒன்றுபற்றி பேசினால் காங்கிரஸ்காரர்கள் அதனையே வைத்து அரசியல் செய்து தங்களை ஓரம்கட்டிவிடுவார்களோ என்ற பயம் அவர்களுக்கு. அதைவிட அவர்களுககு இருக்கும் பயம் தமது கட்சிக்குள்ளேயே இருக்கின்ற ‘தமிழ் தேசியவாதிகள்’ தம்மை ஓரம்கட்டிவிடுவார்களோ என்பது. கட்சி என்னவோ இப்போது சுமந்திரனின் பிடிக்குள்தான் இருக்கின்றது. ஆனால் மக்கள் ஆதரவு எந்தப் பக்கத்தில் என்பதற்கு ஒன்றும் ஆராய்ச்சி தேவையில்லை.

கிவுல் ஓயா திட்டத்திற்கு எதிராக கடந்த வாரம் நெடுங்கேணியில் தமிழ் அரசு கட்சியும் ஜனநாயக தமிழ் தேசிய முன்னணியும் கூட்டாக நடாத்திய ஆர்ப்பாட்டப் பேரணியில் கணிசமான அளவு தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டிருந்தனர். வவுனியாவில் சற்று பலமான ஆதரவுத் தளத்தைக் கொண்டிருக்கும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியினரும் இணைந்து அந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது அதன் வெற்றிக்கு உதவியது என்பதும் தெரிந்ததுதான். ஆனால் அந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த சுமந்திரன், அதுஒரு திருப்புமுனையான போராட்டம் என்றார்.

அந்தப் போராட்டத்திற்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதுபோல இருந்த சிவஞானம் சிறிதரன், சுதந்திரதினத்தன்று மாபெரும் பேரணியை கிளிநொச்சியில் நடாத்திக்காட்டி தனது ‘பலத்தை’ நிரூபித்திருக்கிறார். தனது மக்கள் ஆதரவு தளத்தை அவர் என்னதான் தக்கவைத்தாலும், அவருக்கு எதிராக- அவரது ஆதரவு தளத்தை தகர்த்துவிடுவதற்காக தமிழ் அரசு கட்சியின் தற்போதைய தலைமை எடுத்துவரும் முயற்சிகளை அவர் தொடர்ந்து உதாசீனம் செய்துவருவது எதிர்காலத்தில் அவருக்கு எதிரான விளைவுகளையே கொண்டுவரலாம்.

உதாரணமாக அவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தபோது ‘பார்’ லைசன்ஸ்களைப் பெற்றார் என்ற பிரச்சாரம் தொடச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. ரணில் ஆட்சியில் இருந்தபோது நூற்றுக்கணக்கான லைசென்ஸ்கள் வழங்கப்பட்டது உண்மை என்பதும் உண்மையானதுதான். ஆனால் தான் அவ்வாறு பெறவில்லை என்று தொடர்ச்சியாகக் கூறிவரும் சிறிதரன்,அதனை நிரூபிக்க முடியுமா என்று சவால்விடுத்து வருகின்றார்.



**எதிர்க்கட்சித் தலைவராக இருந்துகொண்டே ஆளும்தரப்போடு இயங்கும் கலாச்சாரத்தை இந்த நாட்டில் தொடக்கிவைத்தவர்களே தமிழ் அரசு கட்சியினர்தானே. நல்லாட்சி அரசு காலத்தில் இராசவரோதயம் சம்பந்தன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக ‘ஆளும் கட்சியில்’ இருக்கவில்லையா?. அப்போது அரசியலுக்கு புதியவரான சிறிதரன், தனது தலைவரைப் பார்த்துத்தானே அரசியலையே கற்றுக்கொண்டிருப்பார்.**

அவர் அதனைப் பெற்றிருந்தால் கூட அதனை நிரூபிக்க முடியாது என்பதும் அவருக்குத் தெரிந்ததுதான். அவர் தனது பெயரில் எடுத்திருந்தால் மட்டுமே அதனை நிரூபிக்க முடியும். அவ்வாறு தனது பெயரில் எடுக்கின்ற அளவிற்கு சிறிதரனும் முட்டாள் அல்ல. இந்தக் கட்டுரையாளர் என்ன சொல்ல வருகின்றார் என்றால், சிறிதரன் பார் லைசன்சை பெற்றிருந்தால் கூட யாராலும் நிரூபிக்க முடியாதுதான், ஆனால் அதனை நிரூபிக்க வேண்டிய அவசியமும் யாருக்கும் இல்லை. ஏனெனில் இன்று அவர் பார் லைசன்ஸ் எடுத்தார் என்றே எல்லோரும் நம்புகின்றனர்.

அதாவது, சிறிதரனின் எதிரிகளின் முயற்சி உண்மையில் வெற்றியே பெற்றிருக்கின்றது. இதைவிடக் கொடுமை, அவ்வாறு சிறிதரன் மீது குற்றச்சாட்டுப்பத்திரம் வாசிப்பவர்களில் சிலரும் அதே லைசன்சைப் பெறுவதற்கு சிபார்சு செய்தவர்கள்தான்.

ரணில் தனது பதவியின் கடைசிக்காலத்தில் இந்து ஆலயங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக வடக்கில் அனேகமாக எல்லா எம்.பி.க்களுக்குமே பெரும்தொகை நிதியை ஒதுக்கிக் கொடுத்தார். அதனைப் பெறாதவர்கள் இருப்பார்களோ தெரியவில்லை.

அதேபோலத்தான் சில விடயங்களை கூறிக்கொண்டே இருந்தால், அது உண்மையோ பொய்யோ மக்கள் அதனை நம்பத் தொடங்கிவிடுவார்கள். இப்போது சிறிதரன், ராணுவ அதிகாரி ஒருவரை கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு நியமிப்பதற்கு ஆதரவளித்தார் என்ற பிரச்சாரமும் இந்த வகையானதே. அரசமைப்பு பேரவையில் சிறிய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதியாக இடம்பிடித்திருக்கும் சிறிதரன், எப்படி ஆளும்தரப்போடு சேர்ந்து வாக்களிப்பது என்று வாதிடுவோரும், ஒரு ராணுவ அதிகாரிக்கு ஆதரவாக எப்படி வாக்களிக்க முடியும் என்று வாதிடுவோரும், அவரை குற்றவாளி ஆக்க படாதபாடுபடுகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்துகொண்டே ஆளும்தரப்போடு இயங்கும் கலாச்சாரத்தை இந்த நாட்டில் தொடக்கிவைத்தவர்களே தமிழ் அரசு கட்சியினர்தானே. நல்லாட்சி அரசு காலத்தில் இராசவரோதயம் சம்பந்தன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக ‘ஆளும் கட்சியில்’ இருக்கவில்லையா?. அப்போது அரசியலுக்கு புதியவரான சிறிதரன், தனது தலைவரைப் பார்த்துத்தானே அரசியலையே கற்றுக்கொண்டிருப்பார்.

சிறிதரன் மீதான தாக்குதல் எதற்காக தீவிரப்படுத்தப்படுகின்றது என்பது ஒன்றும் இரகசியமானது அல்ல. அவர் கட்சியின் தலைவராக பொதுச்சபையால் தெரிவுசெய்யப்பட்டபோதிலும் அவரை அந்தப் பதவியில் அமரவிடாமல் செய்தவர்கள் இப்போது அவரை எம்.பி. பதவியிலிருந்தும் அகற்றுவதன்மூலம் பின்கதவு வழியாக பதவிபெற முயற்சிப்பதாக மக்கள் நம்புகின்றனர்.

இப்போது அதன் முதல்கட்டமாக அவரது பாராளுமன்ற குழுத்தலைவர் பதவி பறிக்கப்பட்டிருக்கின்றது. ‘நான் கட்சித் தலைவராக இருக்கும்வரை சிறிதரனை கட்சியிலிருந்து வெளியேற்ற அனுமதிக்கப்போவதில்லை’ என்று கட்சியின் பதில் தலைவர் சிவிகே சிவஞானம் அவர்கள் தனக்கு நெருக்கமானவர்களுக்கு கூறியதாக சில செய்திகள் வெளிவந்திருந்தன. அவரும் கையொப்பமிட்டே சிறிதரனின் பாராளுமன்ற குழுத்தலைவர் பதவி பறிக்கப்பட்டிருக்கின்றது.

கட்சியின் அரசியல்குழுவில் எட்டுப்பேர் இருப்பதாகவும் அதில் ஒருவரான சிறிதரன் தவிர்த்து மற்றயை ஏழுபேரும் எடுத்த தீர்மானத்தின்படியே சிறிதரன் பதவி பறிக்கப்பட்டதாகவும் சுமந்திரன் தெரிவித்திருந்தார். கடந்த 25ம் திகதி நடந்த அரசியல்குழு கூட்டத்தில் இது குறித்து தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார். அரசியலமைப்பு பேரவை உறுப்பினர் பதவியை அவர் ராஜினாமா செய்யாவிட்டால் அவரது பதவியை பறிப்பதாக முடிவுசெய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது. ஆனால் அவர் பதவி விலகுவதற்காக எத்தனை நாட்கள் அவருக்கு அவகாசம் வழங்கப்பட்டது என்பதும் தெரிவிக்கப்படவில்லை. அதைவிட கவனிக்கவேண்டியது தான் கலந்துகொண்ட அரசியல்குழு கூட்டத்தில் அப்படியொரு தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட பாரராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்திருந்தது.

பதில் தலைவர் சிவஞானம் நீண்டகாலம் ஒரு நிர்வாக அதிகாரியாக இருந்தவர். ஒருவருக்கு இதுபோன்ற பணிப்புரைகளை விடுக்கின்றபோது, அதற்கான கால அவகாசத்தையும் வழங்கவேண்டும். இது சட்டத்தரணியான சுமந்திரனுக்கு தெரியாததல்ல. 25ம் திகதி கூட்டத்தில் அவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தாலும்கூட, அதற்காக அவருக்கு காலஎல்லையை நிர்ணயித்து அறிவிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அப்படி செய்யாமல், ஐந்து நாட்களில் பதவியை பறிப்பதாக அறிவித்திருப்பது எதற்காக இவர்கள் அவசரப்படுகின்றார்கள் என்ற கேள்வியை எழுப்புகின்றது.

சிறிதரனை கட்சியிலிருந்து வெளியேற்றுவதை தான் தலைவராக இருக்கும்வரை அனுமதிக்கப்போவதில்லை என்றுதான் சிவஞானம் அவர்கள் தெரிவித்ததாக கூறப்பட்டது. ஆனால் சிறிதரன் கட்சியிலிருந்து வெளியேறினால் அதனை தடுப்பேன் என்று அவர் கூறவில்லை என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். சிறிதரன் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டாலோ அல்லது வெளியேறினாலோ அதனால் உடனடி லாபம் யாருக்கு என்பது ஆராய்ச்சி செய்து கண்டறியப்படவேண்டியதில்லை.

ஆனால் சிறிதரனுக்கு அடிக்க அடிக்க அவருக்கு நோகின்றதோ என்னவோ கட்சிக்குத் தான் நோகின்றது என்பது கட்சியின் இன்றைய தலைமைக்கு புரியப்போவதில்லை.

இராணுவ அதிகாரி ஒருவரை கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு கொண்டு வருவதற்கு சிறிதரன் ஆதரவளித்தார் என்று திரும்பத்திரும்ப கூறுவதன்மூலம் சிறிதரனின் ஆதரவு தளத்தை ஆட்டம் காணச்செய்யலாம் என்று போடப்படும் கணக்கும் தப்பானது என்பது சம்பந்தப்பட்டவர்களுக்கு புரியப்போவதில்லை.

எந்த அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடினார்களோ, அந்த அரரசுடன் சேர்ந்து தம்மை பாதுகாக்கவேண்டிய நிலையை விடுதலைப் புலிகள் ஒரு கட்டத்தில் எதிர்கொண்டார்கள். பலம்பொருந்திய இந்திய ராணுவத்திடமிருந்து தம்மைப்பாதுகாக்க-

அவர்களை வெளியேற்ற இலங்கை அரசுடன் விடுதலைப் புலிகள் கைகோர்த்து, இந்திய ராணுவத்தை இலங்கையிலிருந்து வெளியேற்றினார்கள்.


பின்னர் அவர்கள் அதே இலங்கை அரசிடம் ஆயுதங்களைப்பெற்று அவர்களையே திருப்பி அடித்தார்கள். புலிகள் இலங்கை அரசுடன் உறவாடியபோது, அவர்களை யாரும் குறைகூறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டுக்கட்டை நிலையில் இருந்து தேசிய நலனுக்காக கருத்தொருமிப்புக்கு ...!



கலாநிதி ஜெகான் பெரேரா



**கணக்காய்வாளர் நாயகம் விவகாரத்தில், கருத்தொருமிப்பு ஜனநாயக அதிகாரமும் அரசியலமைப்பு ரீதியான மேற்பார்வையும் ஒத்தசைந்து இயங்குவதை சாத்தியமாக்கியிருக்கிறது. அத்தகைய ஒரு சமநிலையை காண்பது என்பது மிகவும் சிக்கலானது, ஆனால் அரசியலமைப்பு ரீதியான ஆட்சிமுறை நிலைபேறாக இருப்பதற்கும் மக்களின் நம்பிக்கையை பெறுவதற்கும் அது என்றென்றும் அவசியமானதாகவே இருக்கும்.**

கணக்காய்வாளர் நாயகமாக சிரேஷ்ட பிரதி கணக்காய்வாளர் நாயகம் சமுதிகா ஜெயரத்னவின் நியமனம் இலங்கையின் மிகவும் முக்கியமான அரசியலமைப்புப் பதவிகளில் ஒன்று தொடர்பாக நீண்ட நாட்களாக நிலவிய நிச்சமற்ற நிலையை முடிவுக்கு கொண்டு வந்திருக்கிறது. முன்னர் அந்த பதவியில் இருந்தவர் 2025 ஏப்ரிலில் ஓய்வுபெற்றதை தொடர்ந்து சுமார் பத்து மாதங்களாக நீடித்த வெற்றிடத்துக்கு நியமனத்தைச் செய்வதற்கு அரசியலமைப்பு பேரவை ஏகமனதாக எடுத்த தீர்மானம் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் தொடர்ச்சியை மீள உறுதிப்படுத்துவதுடன் இலங்கையின் அரசியலமைப்பு ஆட்சிமுறை எவ்வாறு நடைமுறையில் இயங்குகிறது என்பது குறித்து சிந்தித்துப் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தையும் வழங்குகிறது.

இந்த நியமனத்தைச் செய்வதற்கு இறுதியில் இணக்கம் காணப்பட்ட விதம் நியமனத்தைப் போன்றே முக்கியமானதாக இருக்கிறது. பல மாதகால முரண்பாட்டுக்கும் பொது விவாதத்துக்கும் பிறகு ஜனாதிபதியின் ஜனநாயக ஆணையுடன் சுயாதீனமான மதிப்பீட்டைச் செய்வதில் அரசியலமைப்பு பேரவைக்கு இருக்கும் பொறுப்புடன் சமநிலைப்படுத்தும் வகையிலான கருத்தொருமித்த ஒரு முடிவுக்கு அந்த பேரவையின் உறுப்பினர்கள் வந்திருக்கிறார்கள். அவ்வாறு செய்ததன் மூலம் அவர்கள் அரசியலமைப்பு ரீதியான தீர்மானத்தை மேற்கொள்வதில் ஒத்துழைப்பு, கட்டுப்பாடு மற்றும் கருத்தொருமிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை நிரூபித்திருக்கிறார்கள்.

நீண்டகாலமாக நிலையுறுதிபெற்ற ஜனநாயக நாடுகள் கூட நிறைவேற்று அதிகாரத்தின் வரம்புமீறலுடன் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு நேரத்தில், இலங்கையின் மிகவும் முக்கியமான ஆட்சிமுறைப் பொறிமுறைகளில் ஒன்றாக அரசியலமைப்பு பேரவை துலங்கி நிற்கிறது. ஜனநாயக ஆணையுடன் சுயாதீனமான மேற்பார்வையை சமநிலைப் படுத்துவதற்கான இலங்கையின் முயற்சி, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கங்களைச் செயலிழக்கச் செய்யாமல் முக்கியமான அரச நிறுவனங்களின் நேர்மையைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட சிறிய ஆனால் முக்கியமான அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்குள் இலங்கைக்கு இடத்தைக் கொடுக்கிறது.

ஜனநாயக அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால், பரந்தளவில் மக்களின் நம்பிக்கையைக் கொண்டிருக்கும் நிறுவனங்களினால் அது கட்டுப்படுத்தப்படுவதாகவும் இருக்க வேண்டும். அத்தகைய முறைமைகளுக்கு இடையிலான செயற்பாடு சமச்சீரற்றதாக இருந்து வந்திருக்கிறது. ஆனால், அடிநாதமாக இருக்கும் கோட்பாடு பரந்தளவில் பொதுவானதாகவே தொடர்ந்தும் இருக்கிறது. நிகரான அல்லது ஒப்பிடத்தக்க பொறிமுறைகள் பல ஜனநாயக நாடுகளில் நடைமுறையில் இருக்கின்றன. ஐக்கிய இராச்சியத்தில் நீதித்துறை மற்றும் சிவில் சேவைக்கான சுயாதீன நியமனங்கள் ஆணைக் குழுக்கள் அமைச்சரவை அதிகாரத்துடன் இணைந்ததாக செயற்படுகின்றன. ஆனால், அவை அரசியல் தற்துணிபை ஒழித்து. விடவில்லை.

கனடாவில், ஜனநாயகப் பொறுப்புக்கூறலுக்கு அத்தியாவசியமானதாக கருதப்படும் சுயாதீனத்தைக் கொண்டிருக்க வேண்டிய கணக்காய்வாளர் நாயகம் போன்ற மேற்பார்வை நிறுவனங்களுக்கான நியமனங்களை பாராளுமன்றக் குழுக்கள் மிகவும் கவனமாக ஆராய்கின்றன. இந்தியாவில், நீதித்துறை நியமனங்களுக்கான கூட்டுத் தேர்வுக்குழு முறைமை மட்டுமீறிய அரசியல் செல்வாக்கில் இருந்து நீதித்துறையை பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறையின் விளைவாகவே பிறந்தது. அதில் நியமனங்களை சிபாரிசு செய்வதில் உச்சநீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கிறார்கள்.

அரசின் மிகவும் முக்கியமான நிறுவனங்களுக்கு உயர்ந்த மட்ட நியமனங்களை உறுதிப்படுத்துவதற்காக நிறுவப்பட்ட இலங்கையின் அரசியலமைப்பு பேரவை தற்போதைய சூழ்நிலைகளின் கீழ் சாத்தியமான சிறந்த ஏற்பாடாகும். அதன் குறிக்கோள் நிறைவேற்று அதிகார பீடத்தின் அதிகாரத்தை நிராகரிப்பதல்ல, ஆனால் நியமிக்கப்படுபவர்கள் சுயாதீனமானவர்களாக, உகந்த தகுதிகளைக் கொண்டவர்களாக, அரசியல் ரீதியில் பக்கச்சார்பற்றவர்களாக இருப்பதை உறுதி செய்வதே நோக்கமாகும்.

அரசியலமைப்பு பேரவையிடம் ஆட்சிமுறையின் ஏழு முக்கியமான துறைகளில் செய்யப்படும் நியமனங்களை மேற்பார்வை செய்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருகிறது. இதில் உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான நியமனங்கள் ஊடாக நீதித்துறை, தேர்தல்கள், அரசாங்க சேவை, பொலிஸ், மனித உரிமைகள், இலஞ்சம் மற்றும் ஊழல், கணக்காய்வாளர் நாயகம் நியமனம் ஆகியவற்றை மேற்பார்வை செய்யும் சுயாதீனக் குழுக்கள் அடக்குகின்றன.

அரசியலமைப்பு பேரவையின் மிகவும் முதன்மையான அம்சம் அதன் கட்டமைப்பு ஆகும். அதன் பத்து உறுப்பினர்கள் அரசாங்கம், பிரதான எதிர்க்கட்சி, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சிறிய அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகத்தில் இருந்து நியமிக்கப்படுகிறார்கள். பாராளுமன்றத்தில் அரசியல் அபிப்பிராயத்தின் பல்வகைமையை பிரதிபலிக்கக்கூடியதாக பேரவையின் பன்முக கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டிருக்கும் அதேவேளை, தேர்தல் போட்டியுடன் நேரடியாக பிணைக்கப்படாத குரல்களையும் அது உள்வாங்கியிருக்கிறது.

முக்கியத்துவம் வாய்ந்த நியமனங்களின் நியாயப்பாடு சட்டரீதியான அதிகாரத்தில் இருந்து மாத்திரமல்ல, சகல தரப்புகளையும் அரவணைக்கும் அணுகுமுறை மற்றும் சமநிலையில் இருந்தும் கூட வருகிறது என்ற நம்பிக்கையை அரசியலமைப்பு பேரவையின் கட்டமைப்பு பிரதிபலிக்கிறது. கணக்காய்வாளர் நாயகத்தின் நியமனம் தொடர்பில் எடுக்கப்பட்ட ஏகமனதான தீர்மானம் அரசியலமைப்பு பேரவையின் சகல உறுப்பினர்களும் கொண்டிருக்கும் கூட்டுப் பொறுப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியில் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரம் பற்றி தீவிரமான விவாதம் மூண்டிருந்த 2000 ஆம் ஆண்டு காலப்குதியிலேயே அரசியலமைப்பு பேரவை பற்றிய யோசனை கடுமையாக ஊக்குவிக்கப்பட்டது. கட்டுப்பாடு இல்லாத நிறைவேற்று அதிகாரம் அதிகார துஷ்பிரயோகத்துக்கும் பொதுமக்களின் நம்பிக்கை வீழ்ச்சிக்கும் பங்களிப்புச் செய்திருக்கிறது என்று சிவில் சமூக அமைப்புக்களும் சட்டத் துறைச் சமுதாயமும் துறைசார் நிபுணத்துவ அமைப்புக்களும் வாதிட்டன.

இன்று தேசிய மக்கள் சக்தியின் பிரதான அங்கத்துவக் கூறாக அமைந்திருக்கும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) அந்த நிலைப்பாட்டுக்காக குரல் கொடுத்த அரசியல் சக்திகளில் ஒன்றாகும். அது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தையும் உள்ளடக்கிய கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசாங்கத்தில் இணைந்து கொண்டது. ஆரசியலமைப்புக்கான 17 வது திருத்தம் கொண்டுவரப்பட்டதை அடுத்து 2001 ஆம் ஆண்டில் அரசியலமைப்பு பேரவையின் முதலாவது வடிவம் நடைமுறைக்கு வந்தது. அது வேறுபட்ட அளவுகளிலான பயனுடைத்தன்மையுடன் செயற்பட்டது.

அந்த முறைமை திருமதி குமாரதுங்கவின் ஆட்சியின் கீழ் நடைமுறைக்கு வந்தது என்ற போதிலும், அரசியலமைப்பு பேரவையின் கருத்துக்களுடன் அவர் பல சந்தர்ப்பங்களில் முரண்பட்ட காரணத்தினால் முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டு நியமனங்களைச் செய்வதில் தாமதம் ஏற்பட்டது. தொடக்கத்தில் இருந்து அரசியலமைப்பு பேரவை அரசியலமைப்புத் திருத்தங்களின் ஊடாக மாறிமாறி பலவீனப்படுத்தப்பட்டும் பலப்படுத்தப்பட்டும் வந்திருக்கிறது. தங்களது சொந்த அதிகாரங்கள் மீதான கட்டுப்பாடுகளை அரசாங்க தலைவர்கள் எந்தளவுக்கு பொறுத்துக் கொள்ளத் தயாராக இருந்தார்கள் என்பதிலேயே அது தங்கியிருந்தது.

அரசியலமைப்புக்கான 18 வது திருத்தம் நியமனங்கள் தொடர்பிலான அதிகாரத்தை மீண்டும் நிறைவேற்று அதிகார பீடத்துக்கு வழங்கியதன் மூலமாக அரசியலமைப்பு பேரவையின் அதிகாரத்தை கணிசமானளவுக்கு குறைத்தது. 19 வது அரசியலமைப்பு திருத்தம் அந்தப் போக்கை மாற்றியமைத்து அரசியலமைப்பு பேரவையை பலப்படுத்தியது. 20 வது திருத்தம் மீண்டும் ஒரு தடவை அரசியலமைப்பு பேரவையின் பாத்திரத்தை குறைத்த அதேவேளை, 21 வது திருத்தம் ஓரளவு சமநிலையை மீண்டும் கொண்டுவந்தது. தற்போது 21 வது திருத்தத்தின் கட்டமைப்பின் கீழேயே அரசியலமைப்பு பேரவை இயங்குகிறது. முக்கியமான நியமனங்களை பொதுவான கருத்தின் அடிப்படையில் செய்ய வேண்டும் என்பதில் மீண்டும் வெளிக்காட்டப்படும் பற்றுறுதி இதன் மூலம் பிரதிபலிக்கிறது.

அரசியலமைப்பினால் பாதுகாக்கப்படுகின்ற ஒரு நிறுவனமான கணக்காய்வாளர் நாயகத்தின் அலுவலகம் அரசாங்க செலவினங்களைக் கண்காணிப்பதிலும் பொது வளங்களை பாதுகாப்பதிலும் தேசிய கணக்காய்வு அலுவலகம் வகிக்கின்ற மத்திய பாத்திரத்தை பிரதிபலிக்கிறது. நம்பகத்தன்மை வாய்ந்ததும் அச்சமற்றதுமான கணக்காய்வு நிறுவனம் ஒன்று இல்லாவிட்டால், பாராளுமன்ற பேற்பார்வை மேலோட்டமானதாக மாறி தடையேதும் இல்லாமல் ஊழல் பெருகக்கூடிய ஆபத்து இருக்கிறது.

ஊழல் ஒழிப்புக்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுக்கின்ற தற்போதைய பின்புலத்தில் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்தின் பாத்திரம் மேலும் கூடுதல் முக்கியத்துவத்தைப் பெறுகிறது. ஊழல் ஒழிப்பு 2024 ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் அரசாங்கம் வாக்காளர்களிடமிருந்து பெற்ற ஆணையின் மைய அம்சமாகும்.

கணக்காய்வாளர் நியமனம் தொடர்பில் அரசியலமைப்பு பேரவை பத்து மாதங்களுக்கும் அதிகமான காலமாக மல்லுக் கட்டிக்கொண்டிருந்தது. (தற்போது அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ) சிரேஷ்ட பிரதி கணக்காய்வாளர் நாயகம் சமுதிகா ஜெயரத்ன உட்பட ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவினால் பிரேரிக்கப்பட்ட நான்கு பேரில் ஒருவரையேனும் அங்கீகரிக்க பேரவை மறுத்தது. பேரவையின் தீர்மானங்கள் குறிப்பிடத்தக்க அளவில் பொதுவிவாத்தை மூளவைத்ததுடன் முக்கியமான அத்தகைய ஒரு நிறுவனத்துக்கான பதவி நீண்டநாட்களாக வெற்றிடமாக இருந்து வந்தது குறித்து விசனமும் தோன்றியது. அதுவும் குறிப்பாக, தற்போது சேவையில் இருக்கும் இராணுவ அதிகாரி ஒருவரின் பெயரை கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஜனாதிபதி பிரேரித்ததை தொடர்ந்து சர்ச்சை தீவிரமடைந்தது.

அதேவேளை, இது விடயத்தில் அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்கள் நடந்து கொண்ட முறை வெறுமனே

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறீதரன் பதவி நீக்க விவகாரத்தில் தமிழரசுத் தலைமைப்பீடத்தின் முன்னுக்குப்பின் முரண் அம்பலம்!

## பனங்காட்டான்

இலங்கையை கடைசியாகக் கட்டியாண்ட பிரித்தானியர்கள், இந்தத் தீவின் சனத்தொகையில் பெரும்பான்மையானவர்களுக்கு தந்திரமாக சுதந்திரத்தை வழங்கிச் சென்ற எழுபத்தெட்டாவது ஆண்டு கடந்த நான்காம் திகதி.

இந்த நாள் நெருங்கி வரும்போதெல்லாம் இலங்கை இரு தேசம் என்பதை அங்குமிங்கும் பறந்து கொண்டிருக்கும் கொடிகள் காட்டிக் கொண்டிருக்கும். சிங்கள பிரதேசங்களில் வாள் ஏந்திய சிங்கக்கொடி பறக்க தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்படும். இதனால் தமிழரின் தேசியக்கொடி கறுப்பு என்பதாகவே காட்சி கொடுக்கும்.

தாயகக்கவி புதுவை இரத்தினதுரை அன்றொரு நாள் இயற்றிய - நீங்க வேறு நாடைய்யா, நாங்க வேறு நாடு - என்ற பாடலின் அர்த்தம் பெப்ரவரி நாளில் பொழிப்பாக காதுகளில் விழும்போது நன்றாகப் புரியும். அநுர குமர அரசின் இரண்டாவது ஆண்டு சுதந்திர தின நிகழ்வு வழக்கம்போல கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றது.

சேனநாயக்கக்களிலிருந்து இறுதியாக ரணில் வரை தங்களின் எழுப்பம் காட்டும் படைத்துறையினரின் சாகசங்களையே இந்நாளில் முக்கியத்துவப்படுத்துவது வழக்கம். ஆனால் அநுர குமர அரசு இதனைச் சற்று கீழிறக்கி படைத்துறையினரின் அணிவகுப்புகளோடும் பலவின மாணவர்களின் நிகழ்வுகளோடும் மாற்றிக் கொண்டது சிங்கள இனவாதிகளுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை.

விடுதலைப் புலிகளுக்கும் வெளிநாடுகளில் வாழ்பவர்களுக்கும் (தமிழர்கள்) அநுர குமர அரசு அடிபணிந்து படைத்துறையினரின் வீரதீரங்களை காட்டவில்லையென முன்னாள் கடற்படை அதிகாரி சரத் வீரசேகர கூச்சல் போடுகிறார். விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை ராஜபக்சக்கள் ஒழித்துக் கட்டிய வீரத்தை அநுர குமர அரசு மூடிமறைத்துவிட்டது என்று நாமல் பேபி ஒப்பாரி வைத்துள்ளார். விடுதலைப் புலிகளை அழிப்பது என்ற பெயரில் ஆயிரமாயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டது, காணாமலாக்கப்பட்டது, சிறையிலடைக்கப்பட்டது எவ்வகையானது என்பதை அநுர குமரவின் ஜே.வி.பி.யினரும் அனுபவத்தில் கண்டவர்கள் என்பதை நாமல் பேபி அறிந்திருக்கவில்லை போலும்.

எங்கு அடிபட்டாலும் நாய் காலைத் தூக்கிக் கொண்டு ஊளையிடுவதுபோல இந்த இனவாதிகளின் வாழ்க்கை இப்படித்தான் கக்கிக் கொண்டிருக்கும். ஒரு வகையில் பார்க்கின் இவர்களுக்கு இன்னமும் புலிப்பயம் இருப்பதுபோல தெரிகிறது. ஆண்டாண்டுதோறும் இவர்கள் இனவாதத்தையே தங்களுக்கான ஆயுதமாக காவித்திரியப் போவது தெரிகிறது.

இது ஒருபுறமிருக்க தற்போது நாற்றமெடுத்து வரும் தமிழர் தாயக அரசியலை கவனிக்க வேண்டியது அவசியமானது. முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை கொழும்பிலிருந்து இறக்குமதி செய்ததால் வடமாகாண சபை தமிழரசின் உட்கட்சி மோதலில் முடக்கம் கண்டதுபோல, கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இன்னொருவரான சுமந்திரனால் தமிழரசுக் கட்சி சரிவு நிலையில் வேகமாகப் பயணித்துக் கொண்டிருப்பதை எதிரணியினர் மட்டுமன்றி வீடுக்குள் வசிப்பவர்களும் காண்கின்றனர். சிவஞானம் சிறீதரனை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் சம்பவங்கள் இதற்கான சான்றாக அமைந்துள்ளன. தமது எம்.பி. பதவியை பறிப்பதை இலக்காகக்கொண்டு காரியங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை சிவஞானம் சிறீதரனே அண்மையில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

தனது சகாவான சாணக்கியனை தமிழரசின் முக்கிய புள்ளியாக உயர்த்தும் முனைப்பில் சுமந்திரன் தீவிரமாக இருப்பது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. சாடிக்கு ஏற்றதாக ஒரு மூடி அரசியலிலும் தேவைப்படுகிறது போலும். கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் புதிய தலைவராக சாணக் கியனை நியமித்திருப்பதாக சுமந்திரன் சில நாட்களுக்கு முன்னர் அறிவித் திருந்தார்.

தமிழரசுக் கட்சிக் குள்ளிருக்கும் பல குழுக்களில் எந்தக் குழுவுக்கு இந்த நியமன அதிகாரம் உள்ளது என்று கட்சிக்காரர்களுக்கே தெரியவில்லை. மட்டக்களப்பில் சிறீநேசன் எம்.பி. பகிரங்கமாகத் தெரிவித்துள்ள கருத்து இதனை நிரூபிக்கிறது. சிறீதரனை இப்பதவியிலிருந்து நீக்குவதற்கு கால அவகாசம் வழங்குவதென்றும், அதன் பின்னர் சாணக்கியனை தற்காலிகமாக இப்பதவிக்கு நியமிக்கலாமெனவும் சிலர் கண்ட கனவு நடைமுறைக்கு வந்துள்ளதாக சொல்கின்றனர்.

சாணக்கியனை கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவராக நியமித்திருப்பதாக சுமந்திரனே அறிவித்திருந்தார். அடுத்த சில மணித்தியாலங்களில் சுமந்திரனின் வடமராட்சித் தொகுதியில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒரு சிலர் பெதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். உடனடியாக கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஒர் அறிக்கையை கட்சியின் பல மட்டங்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்களுக்கும் அனுப்பியிருந்தார்.

'இது ஆர்வக்கோளாறு என்றாலும் கட்சியின் நலனுக்கும் ஒற்றுமைக்கும் குந்தகமானது. இவை கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். கட்சியின் தலைமை நிலைக்கு இது முரணானதும் கூட" என்று திரு.சி.வி.கே.சிவஞானத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அறிக்கையின் இறுதிப் பகுதியில், தலைமை நிலைக்கு இது முரணானதும் கூட என்று குறிப்பிடப்பட்ட வரிகள் ஆழமான அர்த்தம் கொண்டவை. சாணக்கியன் கட்சியின் தலைமையால் அதிகாரபூர்வமாக நாடாளுமன்றக் குழுத்தலைவராக நியமிக்கப்படவில்லையோ என்ற சந்கேதத்தையும் இது ஏற்படுத்துகின்றது.

சிறீதரன் எம்.பி. தலைவர் பதவியிலிருந்து தாமாகவே வெளியேறினால் சாணக்கியனை தற்காலிகமாக அப்பதவிக்கு நியமிக்கலாமென கட்சி தற்காலிகமாக முடிவெடுத்ததாகவும் ஒரு தகவல் உண்டு. ஆனால், அது மறைக்கப்பட்டு, சாணக்கியனை அப்பதவிக்கு நியமித்துவிட்டதாக சுமந்திரன் அறிவித்ததால்தான் இவரது ஆதரவாளர்கள் இனிப்புகள் வழங்கியும் பட்டாசு கொழுத்தியும் மகிழ்ச்சி தெரிவிக்கும் நிலைமை உருவாகியது.

சுமந்திரன் தன்னிச்சையாக ஊடகங்களுக்குத் தெரிவிக்கும் கருத்துகள் கட்சித் தலைமைக்குள்ளேயே அபிப்பிராய பேதங்களை உருவாக்கி வருகிறது. கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் பாம்புக்கு பால் வார்க்க வேண்டாமென்று நேரடியாகவே குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு விடயம் விசம்போல பரவி வருகிறது. மகிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுன எம்.பி.யான தயாசிறி ஜெயசேகர நாடாளுமன்றத்தில் சிறீதரன் மீது வசைபாடிய வரலாறு பிரசித்தமானது. இதற்குத் தேவையான விடயதானங்களை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பைச் சேர்ந்த எம்.பி. ஒருவரே வழங்கியிருந்தாரென கடந்த வாரம் இப்பத்தியில் நான் குறிப்பிட்டிருந்தேன். மற்றொரு அரசியல் விமர்சகர் தாம் எழுதும் வாரப்பத்தியில் அந்த எம்.பி.யின் பெயரைக் குறிப்பிட்டே எழுதியிருந்தார்.


குறிப்பிட்ட தமிழரசு எம்.பி. முன்னர் ராஜபக்சக்களின் அரசியல் அணியில் ஒருவராகச் செயற்பட்டவர் என்றும், இப்போது அதே ராஜபக்ச அணியைச் சேர்ந்த தயாசிறி ஜெயசேகரவுடன் இவர் வைத்திருக்கும் தொடர்பின் வெளிப்பாடாகவே சிறீதரன் மீதான தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்றும் தெரிகிறது. எனவே, கட்சியின் கட்டுப்பாட்டை மீறி கட்சிக்கே அவமானத்தை ஏற்படுத்தியிருக்கும் அந்த எம்.பி.மீது இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வியும் கிழக்கு மாகாணத்திலிருந்தே வந்துள்ளது.

இறுதியாக இன்னொரு முக்கிய விடயம். ஜனவரி மாதம் 30ம் திகதியிட்ட கடிதம் ஒன்றை நாடாளுமன்ற சபாநாயகருக்கு தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் பதில் செயலாளர் சுமந்திரனும் ஒப்பமிட்டு அனுப்பியிருந்தனர். கட்சியின் நாடாளுமன்ற குழுத்தலைவர் பதவியிலிருந்து சிவஞானம் சிறீதரனை நீக்க தங்கள் கட்சி முடிவெடுத்துள்ளதாக இக்கடிதத்தில் இவர்கள் குறிப்பிட்டிருந்தனர். பதவி நீக்கம் செய்ய முடிவெடுத்திருப்பதாக குறிப்பிடப்பட்டதே தவிர பதவி நீக்கப்பட்டதாக இக்கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை.

2024 நவம்பர் பொதுத்தேர்தலையடுத்து தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி தங்களின் தலைவராக சிவஞானம் சிறீதரனை தெரிவு செய்தனர். அவ்வேளையில் தமிழரசுக் கட்சி தலைமைப்பீடம் சிவஞானம் சிறீதரனின் நியமனம் தொடர்பாக சபாநாயகருக்கு எந்தக் கடிதமும் அனுப்பவில்லை. சிறீதரனின் பதவி நியமனம் நாடாளுமன்ற குழுவுடன் சம்பந்தப்பட்டது என்பதால் அது தொடர்பாகக் கடிதம் எழுதும் தேவை கட்சியின் தலைமைப்பீடத்துக்கு இருக்கவில்லை அல்லது பொருந்தாதது என்பதே இதன் கருத்து.

அப்படியானால் சிறீதரனின் பதவி நீக்க முடிவை நாடாளுமன்றக் குழுவே எடுத்திருக்க வேண்டும். இதன்படி பார்க்கின், சிறீதரனை பதவி நீக்கம் செய்த கடிதத்தை சபாநாயகருக்கு தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடத்தினர் எழுத்து மூலம் அறிவித்திருப்பது முன்னுக்குப்பின் முரணானது. சட்டச் சிக்கலுக்குள் இது இழுத்துச் சென்றிருப்பதாகவும் பார்க்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட சட்டவாளர்கள் சிலர் இதனை பரிசீலனைக்கு உட்படுத்தி வருவதாக கிளிநொச்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.







> 2024ல் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் பதவிக்கு சிவஞானம் சிறீதரன் தெரிவு செய்யப்பட்டபோது அது பற்றி அதிகாரபூர்வமாக தமிழ ரசுக் கட்சியின் தலைமைப்பீடம் நாடாளுமன்ற சபாநாயருக்கு கடிதம் எதுவும் அனுப்பவில்லை. ஆனால்ரூபவ் அவரை பதவி நீக்கம் செய்த விடயத்தை சபா நாயருக்கு எழுத்து மூலம் அறி வித்தது முறையானதா என்ற கேள்வி சட்டவாளர்கள் மத்தி யில் எழுந்துள்ளது.

**ஆனைக்கும் அடி சறுக்குமாம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஞ்சன் அருண் பிரசாத்

# தமிழர் பகுதியில் அமையும் நீர்த்தேக்க திட்டத்தை தமிழர்களே எதிர்ப்பது ஏன்?




வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அமைக்கப்படவுள்ள உத்தேச கிவுல் ஓயா நீர்பாசனத் திட்டத்திற்கு தமிழர்கள் பாரிய எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

கிவுல் ஓயா நீர்த்தேக்க திட்டத்தை கைவிடுமாறு கோரி, வவுனியாவில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றும் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், தொடர்ச்சியாக பல்வேறு வகையிலும் தமது எதிர்ப்புக்களை தமிழர்கள் வெளியிட்டு வருகின்றனர்.

வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பாலான தமிழ் கட்சிகள் இந்த திட்டத்திற்கு தமது எதிர்ப்புக்களை பதிவு செய்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

தமிழர் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த திட்டத்திற்கு தமிழர்களே ஏன் எதிர்ப்பை வெளியிடுகின்றனர்?

**கிவுல் ஓயா திட்டம்**

வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள காணிகளில் 1983ம் ஆண்டு குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்களுக்கான நீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு உருவாக்கப்பட்ட திட்டமே இந்த கிவுல் ஓயா திட்டம் என தமிழர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

குறித்த பகுதிகளில் வாழும் சிங்கள மக்களினால் செய்கை செய்யப்பட்டுள்ள விவசாய நிலங்களுக்கும், அவர்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கும் தேவையான நீர் இந்த திட்டத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளது என தமிழர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

2011ம் ஆண்டு கிவுல் ஓயா திட்டத்திற்கு யோசனைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், பல்வேறு காரணங்களினால் இந்த திட்டத்தின் பணியை முன்னெடுக்க முடியவில்லை.

இந்த நிலையிலேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இந்த திட்டத்தை அமலுக்கு கொண்டு வர தீர்மானித்துள்ளது.

இதன்படி, 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் தேதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட இந்தத் திட்டம், வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள மா ஓயாவின் முக்கிய துணை நதியான கிவுல் ஓயாவை குறுக்காக அணை அமைத்து கிவுல் ஓயா நீர்த்தேக்கத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



இந்தத் திட்டத்தின் மூலம், 1,700 ஹெக்டேர் புதிய நிலங்களில் விவசாயம் செய்ய நீர் வழங்கப்படுவதுடன், ஏற்கனவே உள்ள 700 ஹெக்டேர் நிலங்களின் பயிர்செய்கை திறனையும் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக கிவுல் ஓயா தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரியமாக வாழ்ந்த தமிழர்களுக்கு விடுவிக்க முடியாத காணிகளை, சிங்கள மக்களின் நீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்படுகின்ற கிவுல் ஓயா திட்டத்திற்கு விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவிக்கின்றார்.

"நாங்கள் இலங்கையின் உலர் வலயத்தில் வாழ்கின்ற மக்கள். வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் நீர்த்தேவை என்பது விவசாய தேவைக்கும், அன்றாட ஜீவனோபத்திற்கும் முக்கியமானது. இந்த நீர்த்தேவை தனியே குடியேற்றப்பட்ட மக்களுக்கு மாத்திரம் இல்லை. அந்த குடியேற்றப்பட்ட மக்கள் என்பது இந்த வன்னி தேர்தல் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் சிறிய மக்கள். அவர்களுக்கு இருக்கின்ற அதே தேவை, மகாவலி எல் வலயத்திற்கு வெளியிலுள்ள மக்களுக்கும் இருக்கின்றது." என்றார் பத்மநாதன் சத்தியலிங்கம்.

"அந்த குறிப்பிட்ட மக்களுக்கு மாத்திரம் இந்த திட்டத்தை செய்கின்றார்கள். ஏனைய மக்கள் கைவிடப்பட்ட மக்களாகவே இப்போதும் இருக்கின்றார்கள். யுத்தம் இடம்பெற்ற பகுதியில் பலர் மீள் குடியேறியுள்ளனர். அவர்கள் வாழ்ந்த பாரம்பரிய பூமி இன்று காடாகியிருக்கின்றது. 2014ம் ஆண்டு இருந்த அரசாங்கம் கூகுள் வரைப்படத்தில் எங்கேங்கெல்லாம் பச்சை நிறமாக இருந்ததோ, அந்த நிலங்களை வனவல திணைக்களத்திற்கு சொந்தமானது என விசேட வர்த்தமானியூடாக அறிவித்திருந்தது." என்றார் அவர்.

"அப்படி அறிவித்த அந்த பிரதேசத்திற்குள் தமிழ் மக்கள் வாழ்ந்த கிராமங்கள், அவர்கள் பயிர் செய்த நீர்பாசன குளங்கள், வயல்கள் எல்லாம் அதற்குள் உள்ளடங்கப்பட்டுள்ளது. இந்த பிரதேசத்திற்குள் மீள்குடியேற வந்த மக்களை அந்த வர்த்தமானியை காட்டி இன்று வரை அவர்களுக்கு அனுமதி வழங்கவில்லை.

இந்த இடத்தை விடுவிக்க நாங்கள் அரசாங்கத்திடம் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தோம். அதை விடுவிக்க மறுப்பு தெரிவிக்கவில்லை. விடுவிப்போம் என்று சொல்கின்றார்கள். ஆனால் குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் அறிக்கை தருகின்றார்கள்."

"பாரம்பரியமாக வாழ்ந்த தமிழ் மக்களை குடியேற விடாத அரசாங்கம், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காட்டை கிவுல் ஓயா திட்டத்திற்காக விடுவித்திருக்கின்றார்கள்" என பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவிக்கின்றார்.

**சிங்கள குடியேற்றமா?**

புதிய சிங்கள குடியேற்றங்களை மீண்டும் கொண்டு வந்து, தமிழர் பகுதிகளில் குடியமர்த்தும் திட்டத்தை இந்த அரசாங்கமும் முன்னெடுக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம் குறிப்பிடுகின்றார்.

"1983ம் ஆண்டு செய்ததை போல அல்லது மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சி காலத்தில் வேறு மாகாணங்களிலிருந்து பெருந்தொகையான சிங்கள மக்களை கொண்டு வந்து குடியேற்றியதை போல இந்த அரசாங்கமும் பெரும்பான்மை சிங்கள மக்களை குடியேற்ற போகின்றார்களா? என்ற சந்தேகம் வருகின்றது" என்றார் அவர்.

கிவுல் ஓயா திட்டத்தின் ஊடாக தமிழர் பிரதேசத்தின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் முயற்சியை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும் என வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் கிருஸ்ணவேணி திருநாவுகரசு கோரிக்கை விடுக்கின்றார்.

"வவுனியா வடக்கு பிரதேசமானது, தமிழர்களின் பூர்வீக பிரதேசமாக காணப்படுகின்றது. எங்களுடைய இந்த பூர்வீக பிரதேசத்தில் சிங்கள மயமாக்குவதற்கான, அதாவது எங்களுடைய பிரதேசத்தில் இன பரம்பலை மாற்றியமைப்பதற்கான அந்த வேலைத்திட்டங்களை இந்த அரசாங்கம் செய்கின்றது என்பது எங்களுக்கு தெட்ட தெளிவாக தெரிகின்றது." என்றார் அவர்

"இவ்வாறான திட்டங்களை இந்த அரசாங்கம் நிறுத்த வேண்டும்." என அவர் குறிப்பிடுகின்றார்.

அபிவிருத்தி என்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்கின்ற போதிலும், அபிவிருத்தி என்ற பெயரில் தமிழர்களின் இருப்பில் கை வைக்க முயற்சிப்பார்களாயின் அதற்கு தாம் எதிர்ப்பை வெளியிடுவதாக முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவிக்கின்றார்.

"சிங்கள மக்களுக்கு நாங்கள் எதிர் அல்ல. சிங்கள குடியேற்றங்களை இனவாதிகள் கொண்டுவர முயற்சிப்பதற்குதான் நாங்கள் எதிர்க்கின்றோம். வவுனியா வடக்கில் அரைவாசிக்கு மேல் சிங்கள குடியேற்றங்கள் வந்து விட்டன. அபிவிருத்தி திட்டமா? சிங்கள குடியேற்றமா?" என கேள்வி எழுப்புகிறார் அவர்.

காடுகள் அழிக்கப்பட்டு இந்த திட்டம் அமல்படுத்தப்படும் பட்சத்தில், யானை மனித மோதல் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சமூக செயல்பாட்டாளர் மாணிக்கம் ஜெகன் குறிப்பிடுகின்றார்.

"எங்களுடைய காடுகள் அழிக்கப்படுகின்றன. இந்த காடுகள் அழிக்கப்படுகின்றமையினால் மனித யானை மோதல்கள் இன்னும் அதிகமான இருக்கும். இன்றும் கூட அடிக்கடி யானைகளினால் மனிதர்களின் உயிர்கள் வன்னி பகுதிகளில் இழக்கப்படுகின்றன. இது இன்னும் அதிகரித்து செல்லும் என்ற பயம் இருக்கின்றது." என அவர் குறிப்பிடுகின்றார்.

**அரசாங்கம் என்ன கூறுகின்றது?**

"கிவுல் ஓயா திட்டமானது, இன மற்றும் மத அடிப்படையிலான நோக்கங்களை கொண்டது என கூறப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது" என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவிக்கின்றார்.

தமிழ் மக்களின் நில உரிமைகளும், சமூக உரிமைகளும் முழுமையாகப் பாதுகாக்கப்படும். எந்த ஒரு சமூகமும் அநீதிக்குள்ளாக்கப்பட அனுமதிக்கப்படமாட்டாது. சட்டத்துக்கு முரணான நில கையகப்படுத்தல்கள் எதுவும் இடம்பெறாது, திட்டம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் உரிய சட்ட நடைமுறைகளின் கீழே மேற்கொள்ளப்படும்" என்று அவர் தெரிவித்தார்.

மேலும், கிவுல் ஓயா திட்டத்தின் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாய உற்பத்தி அதிகரிக்கப்படுவதோடு, ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்களுக்கு நிலையான நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தை இன அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்காமல், நாட்டின் நீண்டகால அபிவிருத்தித் தேவையாகக் கருதி அணுக வேண்டும் என்று அவர் கூறினார். (பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சமாதந்திரங்கள்?

-நிலாந்தன்

கட்சிக்குள் சிறீதரனை மதிப்பிறக்கம் செய்வதில் சுமந்திரன் தொடர்ந்து முன்னேறிவருகிறார். முக்கால் நூற்றாண்டுகால வயதைக்கொண்ட கட்சிக்குள் முதன்முதலாக தலைவருக்காக நடந்த ஒரு தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டவர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தலைமைப்பொறுப்பை ஏற்கவிடாமல் தடுக்கப்பட்டு வருகிறார். இரண்டு ஆண்டுகளாக தொடர்ச்சியான தந்திரமான புத்திசாலித்தனமான நகர்வுகளின் ஊடாக ஓரங்கட்டப்பட்டு வருகிறார்.

சிறீதரனை கட்சிக்குள் சுற்றிவளைக்கும் வேலையை கடந்த இரண்டு ஆண்டுகளாக சுமந்திரன்அணிசெய்துவருகிறது. சிறீதரன் எவ்வாறு கட்சிக்குள் ஓரங்கட்டப்படுகிறார்?

75 ஆண்டுகால வயதைகொண்ட கட்சிக்குள் முதன்முதலாக நடந்த தலைவர் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டவர் செயற்படமுடியாதபடி வழக்குப்போடப்பட்டது. அடுத்ததாக கட்சிக்குள் தீர்மானம் எடுக்கும்பொறுப்புகளில் அவருக்கு எதிரானவர்கள் அல்லது அவருடைய எதிர் அணியின் பக்கம் சாயக்கூடியவர்கள் படிப்படியாக நகர்த்தப்பட்டார்கள்.

இதன்மூலம் கட்சித்தீர்மானங்கள் சிறீதரனை ஓரங்கட்டும்விதத்தில் அமைவது உறுதிசெய்யப்பட்டது. அவ்வாறு பொறுப்பான பதவிகளை சிறீதரனின் எதிரணிகையில் எடுத்ததன் மூலம் கட்சியின் அடிமட்டக் கட்டமைப்பை படிப்படியாக சிறீதரனுக்கு எதிரானதாக வடிவமைக்கும் வேலைகள்தொடங்கின.

அடுத்ததாக சிறீதரனின் சொத்துக்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள். அவர் மதுச்சாலை அனுமதி பெற்றுக்கொடுத்ததாகக் குற்றச்சாட்டுக்கள். இதுதொடர்பானமுறைப்பாடுகளைச் செய்வதற்கு தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் பயன்படுத்தப்படடார்.

அதேசமயம் கட்சித்தேர்தலிலும் நாடாளுமன்ற தேர்தலிலும் தோற்ற காரணத்தால் மீடியா வெளிச்சத்தில் இருந்து ஒதுக்கப்பட்டிருந்த சுமந்திரன், கட்சிக்குள் பொறுப்பான பதவியைப்பெற்றதன் மூலம் மீண்டும் ஊடகங்களுக்குமுன் அடிக்கடிதோன்றும் வாய்ப்புகள் அதிகரித்தன. யார் தூதரகங்களை நெருங்கிச்செல்வது, குறிப்பாக யார் இந்தியாவின் இதயத்தில் இடம் பிடிப்பது என்பதிலும்போட்டி.

அரசியலமைப்புப் பேரவையில் சிறீதரன் அரசாங்கத்திற்கு ஆதரவாக 8 தடவைகள் வாக்களித்துள்ளார் என்ற குற்றச்சாட்டை கட்சிக்கு உள்ளேயும் கட்சிக்கு வெளியே பகிரங்கமாகவும் திரும்பத்திரும்ப கூறுவதன்மூலம் கட்சிக்குள் மட்டு மல்ல சமூகத்துக்குள்ளும் அவரைமதிப்பிறக்கம் செய்ய முயற்சிக்கப்பட்டது. அதைவிடமுக்கியமாக அவருடைய தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கேள்விக்கு உள்ளாக்க முயற்சிக்கப்பட்டது.

இந்தக்குற்றச்சாட்டின் இறுதி விளைவாகத்தான் இப்பொழுது கட்சியின் நாடாளுமன்ற குழுத்தலைவர் பதவியில் கை வைக்கப்பட்டிருக்கிறது.

சிறீதரன் கட்சிக்குள் மட்டும் சுற்றிவளைக்கப்படவில்லை. நாடாளுமன்றத்திலும் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினராகிய தயாசிறீ கட்சியின் உள்மோதல்களைப் பிரதிபலித்தார். தமிழ்மக்கள் மத்தியில் உள்ள நீண்ட பாரம்பரியத்தை கொண்ட மூத்தகட்சி ஒன்றுக்குள் ஏற்பட்ட உள்முரண்பாட்டை ஒருசிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் ஊடாகப்பேசவைத்தமை என்பது தமிழ்த் தேசிய வரலாற்றில் இதுதான் முதல்தடவை.

இவைதவிர சிறீதரனின் அணிக்குள் இருப்பவர்கள் கழட்டி எடுக்கப்படுகிறார்கள். அவர்கள் ஊடகச்சந்திப்புகளை நடத்தி சிறீதரனைஅவமானப்படுத்துகிறார்கள்.

ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் வேலை செய்யும் உள்நாட்டு அலுவலர் என்னிடம் கேட்டார், "ஹைபுறொபைலில்" இருப்பவர்கள் கூட சிறீதரனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளைப் பிரதிபலிப்பதாகத் தெரிகிறது. ஏன் இப்படி" என்று.

சிறீதரனுக்கு எதிரான பிரசார அணிக்குள் பிரபலமானவர்கள் லோயர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் வாதிகள், சமூகத்தில் நல்லபொறுப்புகளை வகிப்பவர்கள், சமூகத்தில் மதிப்புக்கெட்டவர்கள், தாயகத்தில் இருப்பவர்கள், புலம்பெயர்ந்து வாழ்பவர்கள்...

என்று ஒருபெரிய அணி இறக்கப்பட்டுள்ளது. மெய்யான முகநூல் கணக்குகள், பொய்யான முகநூல் கணக்குகள் என்று சமூகவலைத்தளங்களில் இரண்டு அணிகளும் பணம் செலுத்திபிரச்சாரம் செய்துவருகின்றன என்ற பொதுவான அவதானிப்பு உண்டு. கடந்த இரண்டு ஆண்டுகளாக இவ்வாறு சிறீதரனுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான நடவடிக்கைகளைத் தொகுத்துப்பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத்தெரிகிறது.

சிறீதரனுக்கு எதிராக மிகநுட்பமான, மிகப்புத்திசாலித்தனமான, மிகத்தந்திரமான, சதிசூழ்ச்சிகள் நிறைந்த ஒருவியூகம் வகுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்த்தேசிய அரசியல் பரப்பில் ஓர் உட்கட்சி முரண்பாட்டைக்கையாள்வதற்கு இவ்வளவு தந்திரமும் இவ்வளவு புத்திசாலித்தனமும் இதற்குமுன் பிரயோகிக்கப்பட்டதில்லை.

இதேயளவு தந்திரத்தை, புத்திசாலித்தனத்தை சிங்கள பௌத்த அரசு கட்டமைப்புக்கு எதிராகவும் ஏன்பயன்படுத்த முடியவில்லை? இதேயளவுதந்திரத்தை, ராஜதந்திரத்தை, புத்திசாலித்தனமான கணித பூர்வமான நகர்வுகளை ஏன்வெளிநாடுகள், பேரரசுகளுடனான அணு குமுறைகளில்கைக் கொள்ளமுடியவில்லை?

தமிழ்ச்சமூகத்தில் சாதாரணமாக குடும்பத்துக்குள்ளேயே கணவன், மனைவிக்கும்- தாய்க்கும் இடையே சுழித் தோட முயற்சிப்பான். சிலசமயம் சகோதரர்களே ஒருவர் மற்றவரைச் சுழித்துக் கொண்டு ஓடுவதுண்டு.

சமூகத்தின் மிகச்சிறிய அலகாகிய குடும்பத்துக்குள் இவ்வாறு மைக்ரோதந்திரத்தை முன்னெடுக்கும் ஒரு சமூகமானது, தனது வெளியுறவுகளில் குறிப்பாக வெளிநா டுகளை அணுகும் விடயத்தில் ஏன் அவ்வாறு ராஜதந்திரமாக நடந்துகொள்வதில்லை?

தமிழ்மக்கள் அதிகமாகப் பார்க்கும் திரைத்தொடர்களில் பெரும்பாலானவை பெண்மைய திரைநாடகங்களே. இதில்வரும் நாயகிகள் செய்யும் தந்திரம் சிலசமயம் அரசியல்வாதிகள் செய்யும் தந்திரத்தைவிடவும் கணித பூர்வமானதாக இருக்கும். நமது வீடுகளில் அதிகம்பார்க்கப்படுவது இந்ததந்திர நாடகங்கள் தான். ஏற்கனவே நமது சிறுவர் கதைப்புத்தகங்களில் பஞ்சதந்திரம் என்ற கதைத்தொகுதி உண்டு.

பஞ்சதந்திரத்தில் தொடங்கி தொலைத் தொடர் தந்திரங்கள் வரையிலும் தந்திரங்களை வாசிக்கின்ற, பார்க்கின்ற ஒருசமூகம், வீட்டுக்குள் குடும்பத்தந்திரத்தை வெற்றிகரமாகப் பயிலும் ஒரு சமூகம், சமூகத்தின் சிறிய நிறுவனங்களாகிய சனசமூக நிலையங்கள், ஆலய அறங்காவல் சபைகள், திருச்சபைகள், பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலைகள் அலுவலகங்களில் "ஸ்டாஃப்ரூய அிம்கள்" போன்ற பெரும்பாலான நிறுவனங்களுக்குள் வெற்றிகரமாக அணிகளை

உருவாக்கி தந்திரம் செய்யும் ஒரு சமூகம், ஏன் அரசியல் அரங்கில் மட்டும் வெளிநாடுகளோடும் வல்லரசுகளோடும் தந்திரமாக புத்திசாலித்தனமாக நடக்கமுடியவில்லை?

தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய சிந்தனையாளரும் ஆன்மீகவாதியும் படைப்பாளியும் ஆகிய மு.தளையசிங்கம் கூறுவார் "சத்தியதந்திரம்" என்று. மகாபாரதத்தில் கிருஷ்ணரின் தந்திரங்கள் இல்லையென்றால் பாண்டவர்கள் வென்றிருக்கவே முடியாது. மகாபாரதத்தை அத்தகைய அர்த்தத்தில் சொன்னால் அது கிருஷ்ணதந்திரந்தான். எனவே சத்தியத்துக்காகப் போராடுகிறவர்கள் தந்திரம்பயிலவேண்டும் என்ற பொருளில் தளையசிங்கம் அதை சத்திய தந்திரம் என்று அழைத்தார்.

ஆனால், தமிழ்ச் சமூகத்தின் பஞ்சமகாதந்திரங்கள் சொந்தச் சமூகத்துக்குள்ளேயே, சொந்தக் குடும்பத்துக்குள்ளையே, ஒரேபாடசாலைக்குள்ளேயேரூபவ் ஒரே ஸ்டாஃப்ரூயஅிமுளுக்குள்ளேயேரூபவ் ஒரே அறக்கட்டளைகளுக்குள்ளேயே, ஒரே திருச்சபைகளுக்குள்ளேயே, ஒரேகட்சிக்குள்ளேயே மட்டும்தானா? வெளிஉலகத்தோடு இல்லையா? ●

> **சிறீதரனுக்கு எதிராக மிகநுட்பமானரூபவ் மிகப்புத்திசாலித்தனமானரூபவ் மிகத்தந்திரமானரூபவ் சதிசூழ்ச்சிகள் நிறைந்த ஒருவியூகம் வகுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்த்தேசிய அரசியல்பரப்பில் ஓர் உட்கட்சி முரண்பாட்டைக்கையாள்வதற்கு இவ்வளவுதந்திரமும்இவ்வளவு புத்திசாலித்தனமும் இதற்குமுன் பிரயோகிக்கப்பட்டதில்லை.**

# சிறந்த ஊடக பணியை மேற்கொள்ளும் தமிழ் ஊடகர்களுக்கு 'பாரதி விருது'!





யாழ்ப்பாணம், பெப். 08

சிறந்த ஊடகப் பணியை மேற்கொள்ளும் தமிழ் ஊடகர்களுக்கு வருடாவருடம் 'பாரதி விருது' வழங்கி கௌரவிக்கப்படும் எனவும் இதனூடாக மூத்த ஊடகர் பாரதியின் வரலாறு வரலாற்றில் பதியப்படும் எனவும் அமரது ஓராண்டு நினைவு மலர் வெளியீட்டு நிகழ்வில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மூத்த ஊடகவியலாளர் பாரதியின் ஓராண்டு நினைவு நாளை முன்னிட்டு நினைவு மலர் வெளியீட்டு நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்திலுள் தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

கடந்த 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி உடல் நலக்குறைவு காரணமாக பாரதி காலமானமை குறிப்பிடத்தக்கது.

பாரதியின் நினைவுகள் வரலாறுகள், சமூகத்துக்குச் செய்து சென்ற கடமைகள் உள்ளிட்ட விடயப்பரப்பில் நினைவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

தொடர்ந்து 'பாரதி ஒரு மனிதநேய ஊடகன்' என்ற மலர் வெளியிட்டு வைக்கப் பட்டது.

இந்நிகழ்வில் டான் குழுமத் தலைவர் எஸ்.எஸ்.குகநாதன், யாழ் பல்கலைப் பேராசிரியர்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள், அபிமானிகள் உறவினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுக்கடலில் இந்திய பாதுகாப்பு படையினர் தாக்கியதாக இலங்கை மீனவர்கள் குற்றச்சாட்டு!

“இந்த சம்பவம் இலங்கை கடற்பரப்பிலேயே நடந்தது. காலி பிரதேசத்திற்கு நேராக மேற்கு கடற்பரப்பில் இந்த சம்பவம் நேர்ந்தது. இது எமக்கு புதுமையாகவுள்ளது. இந்த கப்பல் எமது நாட்டு ரேடார் கட்டமைப்பில் நிச்சயமாக பதிவாகியிருக்கும்”



“எமது நாடு... எமது வீட்டுக்குள் வந்து, எம்மீது தாக்கியதை போன்றதொரு சம்பவம் தான் இது. எமது எல்லைக்குள் வந்து தாக்குதலை நடத்தியமையானது, எமது வீட்டுக்குள் வந்து தாக்கியதை போன்றது அல்லவா” என இலங்கை மீனவர் சுரங்க நிசல் தெரிவித்துள்ளார்.

மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சென்ற இலங்கை மீனவர்கள் மீது நடுக்கடலில் வைத்து, வெளிநாட்டவர்கள் தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் சம்பவமானது நடந்துள்ளது.

தம்மீது இந்திய பாதுகாப்பு பிரிவினரே தாக்குதல் நடத்தியதாக, தாக்குதலுக்கு இலக்கான இலங்கை மீனவர்கள் கூறி வருகின்ற நிலையில், இது ராஜீய பிரச்னையாக உருவெடுத்துள்ளது.

இது ராஜீய ரீதியில் தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்னை என கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே, தெரிவித்துள்ளார்.

“29ம் தேதி இரண்டு படகுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 30ம் தேதி மற்றுமொரு படகில் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 29ம் தேதி தாக்குதல் தொடர்பான தகவல் கிடைத்தவுடன், கடற்படைக்கு நாங்கள் அறிவித்து, படகொன்றை விரைவில் அனுப்பி அவர்களை காலிக்கு அழைத்து வந்தோம். அவர்களை மருத்துவமனையில் அனுமதித்து, சிகிச்சைகளின் பின்னர் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்”.

“இந்திய பாதுகாப்பு பிரிவினர் தாக்குதல் நடத்தியதாக மீனவர்கள் கூறுகின்றார்கள். எனினும், எமக்கு அது தொடர்பில் உறுதியாக தெரியாது. அதனால், வெளிவிவகார அமைச்சுக்கும், கடற்படைக்கும் நாங்கள் அறிவித்தோம். தாக்குதலை நடத்துவதற்கு வருகைத் தந்த படகு இலங்கைக்கு சொந்தமானதா? அல்லது வெளிநாட்டுக்கு சொந்தமானதா என்பது தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காகவே நாங்கள் அவர்களுக்கு அறிவித்தோம்” என்கிறார் ரத்ன கமகே.

“அது வெளிநாட்டுக்கு சொந்தமானது என்றால், அது அதிகாரப்பூர்வமானதா அல்லது அதிகாரப்பூர்வமற்றதா என்பது குறித்தும் ஆராயுமாறு கூறியுள்ளோம். அதன்பின்னர் போலீஸ் தரப்பிலும் விசாரணைகளை நடத்துமாறு நாங்கள் அறிவித்துள்ளோம். தாக்குதலுக்கு இலக்கான நபர்களிடம் வாக்கு மூலம் பதிவு செய்து, அது தொடர்பிலான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளோம்” என்கிறார் ரத்ன கமகே.

எனினும், இந்த தாக்குதலை இந்திய தரப்பினால் மேற்கொள்ளப்பட்டது என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என கடற்றொழில் பிரதி அமைச்சர் குறிப்பிடுகின்றார்.

“எனினும், இது வெளிநாடொன்றுடன் தொடர்புப்பட்டுள்ளமையினால், ராஜீய ரீதியில் இதற்கு தீர்வு காண வேண்டும்” என அவர் கூறுகின்றார்.

இலங்கை கடல் எல்லைக்குள் மற்றும் சர்வதேச கடல் எல்லையில் இலங்கை நெடுநாள் மீன்பிடி படகிலிருந்த மீனவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் 8 பேர் காயமடைந்துள்ளதுடன்,

> **தம்மீது இந்திய பாதுகாப்பு பிரிவினரே தாக்குதல் நடத்தியதாக, தாக்குதலுக்கு இலக்கான இலங்கை மீனவர்கள் கூறி வருகின்ற நிலையில், இது ராஜீய பிரச்னையாக உருவெடுத்துள்ளது.**
> **இது ராஜீய ரீதியில் தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்னை என கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே, தெரிவித்துள்ளார்.**

அவர்களில் பலத்த காயமடைந்த நால்வர் காலி போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அனைத்து இலங்கை நெடுநாள் மீன்பிடி படகின் உரிமையாளர் சங்கம் தெரிவிக்கின்றது.

வெல்லமன்கரய மீன்பிடி துறைமுகத்திலிருந்து தொழிலுக்கு சென்ற சிலாபம் - தொடுவாவ பிரதேசத்தின் “தினிதி துவ” பெயரை கொண்ட இரண்டு படகுகள் மற்றும் “சந்துன் புதா” ஆகிய மூன்று படகுகளில் சென்ற மீனவர்களே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக சங்கத்தின் செயலாளர் ருவன் பெர்ணான்டோ தெரிவிக்கின்றார்.

“தினிதி துவ 1” மற்றும் “தினிதி துவ 2” ஆகிய இரண்டு படகுகளில் சென்றவர்களும் ஒரு மாதத்திற்கு மேல் தொழில் செய்து, மீண்டும் வெண்ணப்புவ நோக்கி வருகைத் தந்துகொண்டிருந்த போது, கடந்த ஜனவரி மாதம் 29ம் தேதி தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

அத்துடன், தியேகோ கார்சியா தீவுக்கு அருகில் வைத்து ஜனவரி மாதம் 30ம் தேதி சந்துன் புதா படகில் சென்ற மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல் நடத்தப்படும் தருணத்தில் இந்திய பாதுகாப்பு பிரிவினருடன் சிங்கள மொழியை பேசிய இரண்டு நபர்கள் இருந்துள்ளதுடன், அவர்கள் மொழிபெயர்ப்பு உதவிகளை செய்துள்ள நிலையில், அவர்கள் கறுப்பு நிறத்திலான கடற்படை சீருடையை அணிந்திருந்ததாக தாக்குதலுக்கு இலக்கான இலங்கை மீனவர்கள், இலங்கை நெடுநாள் மீன்பிடி படகின் உரிமையாளர் சங்கத்திடம் கூறியுள்ளனர். இந்திய பாதுகாப்பு பிரிவினர் என கூறப்படும் தரப்பினர் இலங்கை மீனவர்களின் படகுகளை சோதனை செய்துள்ளதுடன், போதைப்பொருள் இருக்கின்றதா என வினவியுள்ளனர் என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்துமாறு இந்தியாவை கோர வேண்டும் என தாக்குதலுக்கு இலக்கான மீனவர்களின் உறவினர்கள் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

தொடுவாவ, மாரவில, குடா மடுவெல்ல, மாதம்பே, சிலாபம் உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 18 பேரே இந்த மூன்று படகுகளில் பயணித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் இலங்கை நெடுநாள் மீன்பிடி படகின் உரிமையாளர் சங்கத்திடம், மீனவர்கள் வழங்கிய அறிவிப்புக்கு அமைய விசாரணைகளை ஆரம்பித்ததாக கடற்றொழில் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

தாக்குதலுக்கு இலக்கான மீனவரான சுரங்க நிசல், கருத்து தெரிவித்துள்ளார்.

“சிறிய ரக படகொன்றில் ஐவர் வருகைத் தந்தார்கள். படகை சோதனை செய்து, தாக்குதலை நடத்தினார்கள். சேட்டிலைட் தொலைபேசி, இரான் படகு, போதைப்பொருள் தொடர்பில் வினவினார்கள். நாங்கள் தெரியாது என கூறிய போதிலும், அவர்கள் தாக்குதலையே நடத்தினார்கள்.” என்கிறார் சுரங்க நிசல்.

அதன்பின்னர், தன்னை கப்பலுக்கு அழைத்து சென்று மீண்டும் தாக்குதலை நடத்தியதாக அவர் குறிப்பிடுகின்றார்.

“இந்த மூன்று பேரையும், படகையும் பணயக்கைதிகளாக எடுக்குமாறு ஒருவர் வந்து கூறினார். நீ என்ன கூறுகின்றாய் என கேட்டார். “அவர்களை கொலை செய்தாலும், என்னை கொலை செய்தாலும் என்னால் இதை மாத்திரமே கூற முடியும்“ என நான் கூறினேன். “எனக்கு ஒன்றும் தெரியாது. நாங்கள் ஒன்றையும் கொண்டு வரவும் இல்லை. ஒன்றும் கிடைக்கவும் இல்லை” என கூறினேன்”

“அதிலிருந்த சிங்களவர்கள் இருவர் என்னிடம் மீண்டும் விசாரணைகளை நடத்தினார்கள். சிங்களவர்களும் எம்மீது தாக்கி விசாரணைகளை நடத்தினார்கள்”

“எம்மீது மீண்டும் தாக்குதல் நடத்த



முயற்சி செய்த சந்தர்ப்பத்தில், “என்னால் கூறுவதற்கு இதற்கு மேல் ஒன்றும் இல்லை” என்று கூறினேன். அதன்பின்னர் “இவர்களிடம் ஒன்றும் இல்லை” என கூறி விடுவித்தார்கள்”

தாக்குதலை நடத்திய கப்பலை அடையாளம் கண்டுக்கொள்ள முடியுமா என தாக்குதலுக்கு இலக்கான மீனவரிடம் வினவிய போது, “கப்பலில் 55 என்ற இலக்கம் இருந்தது. ஆங்கில எழுத்துக்கள் இருந்தன. எனக்கு நினைவில்லை” என குறிப்பிட்டார்.

“அதில் இந்தியர்கள் இருந்தார்கள் என்பதை நூறு வீதம் உறுதியாக என்னால் கூற முடியும். இந்தியாவின் கப்பல் என என்னால் கூற முடியும். அதில் தமிழர்களும் இருந்தார்கள். தலையில் துண்டை கட்டிய பஞ்சாபியர்களும் இருந்தார்கள். ஹிந்தி மொழியிலும் கதைத்தார்கள். தமிழ் மொழியிலும் கதைத்தார்கள். சிங்களவர்கள் இருவரும் இருந்தார்கள். அந்த இரண்டு சிங்களர்களுமே என்னிடம் விசாரணை செய்தார்கள். இரண்டு சிங்களவர்களும் எம்மீது தாக்குதல் நடத்தினார்கள். கொண்டு வந்ததை கூறுமாறு சொல்லி தாக்கினார்கள். இல்லையென்றால் நிச்சயமாக கொலை செய்வோம் என அச்சுறுத்தினார்கள்”

கடற்றொழில் திணைக்களம் வழங்கிய தகவலுக்கு அமைய, மருத்துவ நடவடிக்கைகளுக்காக இந்த மீனவர்கள் கரைக்கு அழைத்து வரப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் புத்திக்க சம்பத் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு கடற்படையினர் ஆதரவை வழங்குவதாகவும் அவர் கூறுகின்றார்.

“இலங்கையின் தெற்கு பகுதிக்கு சென்றே இவர்களை நாங்கள் மீட்டெடுத்தோம். அவர்கள் கூறும் இடம், தாக்குதல் நடத்திய தரப்பினர் யார் என்பது குறித்து கடற்படையினர் உறுதிப்படுத்திய பின்னரே கூற முடியும்.”

“ஒவ்வொரு தரப்பினர் வெவ்வேறு கருத்துக்களை கூறுகின்றனர். ஒரு சந்தர்ப்பத்தில் இந்திய கடலோர காவல்படை என கூறுகின்றனர். இன்னுமொரு தருணத்தில் இந்திய கடற்படை என கூறுகின்றார்கள்.”

“நாங்கள் தொழில்நுட்ப ரீதியில் விசாரணைக்கு ஆதரவை வழங்குவோம். அந்த இடத்தில் யார் இருந்தார்கள் என்பது குறித்து உறுதிப்படுத்திய பின்னரே எங்களால் அதனை கூற முடியும்” என கடற்படை ஊடகப் பேச்சாளர் குறிப்பிடுகின்றார்.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தை தொடர்புகொண்டு வினவிய போது,

இந்திய கடற்படை அல்லது இந்திய கடலோர காவல்படை பிரிவினால் இலங்கை மீனவர்கள் தாக்கப்படவில்லை என கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஊடகங்களின் ஊடாக வினவப்படுகின்றதே தவிர, அரசாங்கத்தினால் உரிய முறையில் இதுவரை தம்மிடம் அறிவிக்கப்படவில்லை என இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

(பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் மேற்குலகு நோக்கிய நட்புறவு: அமெரிக்காவில் இருந்து தூர விலகும் ஐரோப்பா!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

உலக அரசியலில் சமநிலை சக்திகள் மாறிவரும் சூழலில், பிரிட்டன் - சீனா உறவுகள் புதிய கட்டத்துக்குள் நுழைந்துள்ளது. இது அமெரிக்கா - பிரிட்டன் உறவுகளில் மாற்றத்தை ஏற்படுத்துமா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ஆனால் இந்த மாற்றங்கள் பல சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் கவனிக்கத்தக்க கேள்விகளாக உள்ளன.

பிரிட்டனின் பிரதமர் கியார் ஸ்டார்மர் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் முயற்சியாக கடந்த ஜனவரி 28 அன்று சீனாவுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டார்.

இந்தப் பயணத்தில், சீன அதிபர் ஷி ஜிங்பிங்கை நேரில் சந்தித்து பிரதமர் ஸ்டார்மர் உரையாடினார். அத்துடன் இருநாடுகளுக்கும் இடையில் பல்வேறு பொருளாதார ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

கடந்த 2018 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரிட்டனின் பிரதமர் ஒருவர் முதல்முறையாக சீனா நாட்டுக்குச் சென்ற நிலையில், அவருடன் பிரிட்டனின் வர்த்தகத் துறை அமைச்சர் பீட்டர் கையில் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளும் சென்றமை குறிப்பிடத்தக்கது.

**சீனாவில் பிரிட்டன் பிரதமர்:**


பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர் சீனாவுக்கு அதிகாரப்பூர்வ விஜயம் மேற்கொண்டதும், பல ஆண்டுகளாக இருந்து வந்த உறவு முறிவுகளை நிவிர்த்தி செய்ய, சீனாவில் பிரிட்டன் பிரதமர் விஜயம் மிக முக்கியத்துவம் கொண்டதாக அமைந்துள்ளது.

இந்த விஜயத்தின் முக்கிய நோக்கமாக, சீனாவுடன் சீர்குலைந்துள்ள இருதரப்பு உறவுகளை சீரமைத்தல், வர்த்தகம், முதலீடு, காலநிலை மாற்றம் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை அதிகரித்தல் என்பதாகும். மேலும் அமெரிக்காவை மட்டுமே சார்ந்திருக்கும் வெளிநாட்டு கொள்கையிலிருந்து பிரிட்டன் சிறிதளவு விலகும் முயற்சி எனவும் சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தற்போது பார்க்கின்றனர்.

கியார் ஸ்டார்மர் தலைமையிலான தொழிற்கட்சி அரசு நடைமுறை சார்ந்த வெளிநாட்டு கொள்கையை முன்னெடுக்க முயற்சிப்பதாக இந்தப் பயணம் கருதப்படுகிறது. முன்னதாக, மனித உரிமைகள், ஹொங்காங், உளவுத்துறை குற்றச்சாட்டுகள் போன்ற விவகாரங்களில் இருநாடுகளுக்கிடையிலான உறவுகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

**சீனாவிற்கு விசா இல்லை:**

பிரிட்டிஷ் பிரதமர் கிய்ர் ஸ்டார்மரின் சீனாவுக்கான அதிகாரப்பூர்வ விஜயத்தின் போது, பிரிட்டிஷ் குடிமக்களுக்கு சீனாவிற்குள் விசா இல்லாத நுழைவை வழங்க சீன அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. சேவைத் துறையை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மை ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



முப்பது நாட்களுக்கும் குறைவாக சீனாவிற்கு வருகை தரும் பிரிட்டிஷ் குடிமக்கள் இப்போது விசா இல்லாமல் நாட்டிற்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். சீன அதிபர் ஜி ஜின்பிங் மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் கியார் ஸ்டார்மர் இடையே பெய்ஜிங்கில் நடந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்த அறிவிப்பு வந்தது.

இந்த நடவடிக்கையை பிரிட்டிஷ் வணிகத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்று பிரதமர் வர்ணித்ததோடு, லண்டன் தனது சேவைத் துறையை மேலும் வலுப்படுத்த நம்புவதாகவும் கூறினார். அறுபதுக்கும் மேற்பட்ட தொழிலதிபர்களுடன் சீனா சென்ற பிரதமர் ஸ்டார்மர், சீன அதிபர் ஜின்பிங்கை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்து இந்த பயணத்தில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியதாகவும் கூறப்படுகிறது.

**அமெரிக்க உறவில் பிளவு?**

தற்போதைய சூழலில் பிரிட்டன் - சீனா இடையிலான உறவுகள் சர்வதேச அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்ப



டுத்தும் எனக் கூறப்படும் நிலையில், அமெரிக்காவுடனான உறவுகள் மேலும் பிளவுப்படக் கூடும் என அஞ்சப்படுகிறது. கிரீன்லாந்து விவகாரத்தில், நீண்டகால கூட்டாளிகளான பிரிட்டன் உள்ளிட்ட நேட்டோ நாடுகளின் மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அதிகப்படியான வரிகளை விதித்து வருகின்றார்.

இதனால், அமெரிக்காவின் நேரடி எதிரிகளில் ஒன்றாகக் கருதப்படும் சீனாவுடன் முன்னணி நாடுகள் கைகோர்பது புதிய வர்த்தகம் மற்றும் புதிய புவியியல் அரசியல் களத்தை உருவாக்கும் என அரசியல் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஏற்கெனவே, கனடா பிரதமர் மார்க் கார்னி கடந்த சில வாரங்களுக்கு முன்பு சீனா சென்றிருந்தார். இதையடுத்து, எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஜெர்மனியின் தலைவர் ஃபிரெட்ரிக் மெர்ஸ் சீனாவுக்குச் செல்வதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனாவுடனான உறவின் மூலமாக பிரித்தானிய ஏற்றுமதியாளர்களுக்குப் பெரும் வாய்ப்பாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியப் பிரஜைகளுக்கு விசா இல்லா பயணச் சலுகை வழங்கப்பட்டமை ஒரு முக்கியமான விடயமாகும். அதேவேளை ஆள் கடத்தல் கும்பல்களுக்கு எதிராக இணைந்து செயல்பட இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வர்த்தகக் கொள்கைகளால் உலகளாவிய பொருளாதாரத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், பிரித்தானிய பிரதமரின் இந்தப் பயணம் மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

சீனா உலக அரங்கில் ஒரு தவிர்க்க முடியாத சக்தி. கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், பொருளாதார வளர்ச்சிக்காக நாம் இணைந்து செயல்பட வேண்டியது அவசியம் எனப் பிரதமர் கியார் ஸ்டார்மர் வலியுறுத்தியுள்ளார்.

இரு தலைவர்களின் சந்திப்பு பீஜிங்கில் உள்ள 'கிரேட் ஹால் ஆஃப் த பீப்பிள்" மண்டபத்தில் எண்பது நிமிடங்கள் நடைபெற்றுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே ஆரோக்கியமான மற்றும் நிலையான உறவை வளர்க்க இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

மேலும், பிரித்தானியாவின் புகழ்பெற்ற 'விஸ்கி' மதுபானம் மீதான இறக்குமதி வரியைக் குறைக்க சீனா இணக்கம் தெரிவித்துள்ளது.

**சீனாவில் கனடா பிரதமர் :**

உலக அரங்கில் அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே வர்த்தகப் போர் முற்றியுள்ள நிலையில், பிற மேற்கத்திய நாடுகள் தங்கள் பொருளாதாரத்தை வலுப்படுத்த சீனாவுடன் இணைந்து கைகோர்க்க தொடங்கியுள்ளன. கடந்த சில ஆண்டுகளாக சீனாவுடன் விரிசல் ஏற்பட்டிருந்த நிலையில், கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி அரசு முறை பயணமாக சீனாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார். 2017-க்கு பிறகு சீனாவிற்கு சென்ற முதல் கனடா பிரதமர் இவராவார்.

கனடாவை தொடர்ந்து, இப்போது இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் சீனாவிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார். கனடா பிரதமர் மார்க் கார்னி, சீனா சென்று அந்நாட்டுடன் பொருளாதார ஒப்பந்தங்களை மேற்கொண்டார். இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த டொனால்டு ட்ரம்ப், கனடா மீது வரிகளை விதிக்கப் போவதாக அச்சுறுத்தினார். இந்நிலையில், பிரிட்டனின் நடவடிக்கை குறித்தும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை:**


சீனாவுடன் வர்த்தக உறவை வலுப்படுத்த முயல்வது பிரிட்டனுக்கு மிகவும் ஆபத்தாக அமையும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அமெரிக்க அதிபரின் அடாவடியான வரி விதிப்பு கொள்கைகளால் உலகின் பல்வேறு நாடுகள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன.

குறிப்பாக ஏற்றுமதியை அதிகம் நம்பி இருக்கும் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்காவுக்கான தங்கள் ஏற்றுமதி குறையுமானால் அதை ஈடுகட்டுவதற்கு ஏற்ப, வேறு நாடுகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புகள் ஆராய்ந்து வருகின்றன.



சீனாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட பிரிட்டன் பிரதமர் கியார் ஸ்டார்மர் பெய்ஜிங்கில் அதிபர் ஜி ஜின்பிங்கைச் சந்தித்துப் பேசியமை குறித்து லண்டனில் உள்ள பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், "இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில் சீரான, நீண்டகால மற்றும் வியூக ரீதியிலான கூட்டாண்மையை உருவாக்க இரு நாட்டு தலைவர்களும் உறுதிபூண்டுள்ளனர். கருத்து வேறுபாடுகள் உள்ள துறைகளில் வெளிப்படையான பேச்சுவார்த்தையைத் தொடர அவர்கள் ஒப்புக்கொண்டனர். பரஸ்பர நலன் சார்ந்த துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் இந்த சந்திப்பின்போது உடன்பாடு எட்டப்பட்டது" என்று தெரிவிக்கப்பட்டது.

சீனா செல்லும் வழியில் விமானத்தில் செய்தியாளர்களிடம் பேசிய கியார் ஸ்டார்மர், "அமெரிக்காவுடன் நெருக்கமாக பணியாற்றி உள்ளேன். எனவே, ட்ரம்ப்பை கோபப்படுத்தாமல் சீனாவோடு பொருளாதார உறவுகளைத் தொடர்ந்து வலுப்படுத்த பிரிட்டனால் முடியும்" என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இதேவேளை பிரிட்டன் பிரதமரின் சீன பயணம் குறித்து ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்தார். அப்படி செய்வது அவர்களுக்கு மிகவும் ஆபத்தானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில், சீன அதிபர் ஜி ஜின்பிங் உடனான சந்திப்பு குறித்துப் பேசிய கியார் ஸ்டார்மர், "சந்திப்பு மிகவும் சுமுகமாக இருந்தது. நாங்கள் எதிர்பார்த்த விளைவுகளை வழங்கியுள்ளது. சில உண்மையான முன்னேற்றங்களை எட்டியுள்ளோம். ஏனெனில், வழங்குவதற்கு இங்கிலாந்திடம் நிறைய இருக்கிறது. விசா இல்லாத பயணம், விஸ்கி மீதான வரி குறைப்பு என முக்கிய ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. உறவை மேம்படுத்த நாங்கள் என்ன செய்கிறோம் என்பதற்கு இவைதான் அடையாளம். பரஸ்பர நம்பிக்கையையும் மரியாதையையும் உருவாக்கும் வழியாக இந்த சந்திப்பை நாங்கள் பார்க்கிறோம்." என தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம்:

## “இன, மொழி, மத அடிப்படையில் சட்டம் பயன்படுத்தப்படக்கூடாது”



கொழும்பு, பெப். 08

திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் சட்டம் முறையாக செயல்படுவது பாராட்டத்தக்கது. பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பல இந்து குருமார்கள் சிறையிலேயே இறந்தார்கள். ஆகவே இன, மொழி மற்றும் மதத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டத்தை பாவிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறோம்- இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“அவசரகால சட்டம் கடந்த காலங்களில் எமது மக்களுக்கு எதிராக மிக மோசமாக பயன்படுத்தப்பட்டது. பயங்கரவாத தடைச்சட்டம் மனித குலத்துக்கு எதிரானதுடன், மனித உரிமைகளுக்கும் எதிரானது. அவசரகால சட்டத்தின் ஒரு பகுதியாக காணப்படும் பயங்கரவாத தடைச்சட்டத்தை தவறாக பயன்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறதா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

பாதிக்கப்பட்ட தரப்பினர் என்ற அடிப்படையில் அவசரகால சட்டத்தையும் பயங்கரவாத தடைச்சட்டத்தையும் தொடர்ச்சியாக எதிர்ப்போம். பயங்கரவாத தடைச்சட்டத்தை ஆட்சிக்கு வந்தவுடன் முழுமையாக இரத்துச் செய்வோம் என்று இந்த அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால், இன்று பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு மாற்றீடாக பிறிதொரு சட்ட வரைபு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது பயங்கரவாத தடைச்சட்டத்தை காட்டிலும் பாரதூரமானது.

பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்ட வரைவில் பயங்கரவாதம் என்பதற்கு முறையான வரைவிலக்கணம் வழங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் அரசாங்கம் நினைக்கும் அனைத்தையும் பயங்கரவாதம் என்ற கட்டமைப்புக்குள் உள்வாங்கலாம். ஆகவே பயங்கரவாத தடைச்சட்டம் மனித குலத்துக்கு முற்றிலும் எதிரானது.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் கைது செய்யப்பட்ட தேரர்கள் பற்றி எதிர்க்கட்சியினர் சபையில் பேசினார்கள். சட்டத்தின் முன் அனைவரும் இந்த நாட்டில் சமம். மத குருமாரோ அல்லது சிவில் பிரஜைகளோ அனைவரும் பொதுச்சட்டத்துக்கு உட்பட்டவர்கள். சட்டத்தின் முன் பாரபட்சம் காட்டப்படக்கூடாது.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் சட்டம் முறையாக செயல்படுவது பாராட்டத்தக்கது.”- என்றார். (எ)

# திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் அவசரகால சட்டம் பயன்படுத்தப்படவில்லை

### பிரதமர் ஹரிணி அமரசூரிய விளக்கம்



கொழும்பு, பெப். 08

திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் அவசரகால சட்டத்தின் பிரகாரம் பௌத்த பிக்குகள் கைது செய்யப்பட்டார்கள் என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடுவது முற்றிலும் தவறானது. சாதாரண சட்டத்தின் பிரகாரமே அந்த தேரர்கள் கைது செய்யப்பட்டார்கள். பொதுச்சட்டத்தின் பிரகாரமே உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. புதிய கல்வி மறுசீரமைப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுகிறார் அவ்வாறாயின் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தியது யார்? தேங்காய் உடைத்தது யார்? கல்வி ஆபாசம் என்று குறிப்பிட்டது யார்? என பிரதமர் ஹரிணி அமரசூரிய கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“பாராளுமன்றத்தில் அடிப்படையற்ற விடயங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை பிரதான பழக்கமாக எதிர்க்கட்சியினர் கொண்டுள்ளனர். எதிர்க்கட்சியின் ஒருசில சிரேஷ்ட உறுப்பினர்கள் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதையிட்டு கவலையடைகிறேன்.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் அவசரகால சட்டத்தின் பிரகாரம் பௌத்த தேரர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் குறிப்பிட்டார். இது முற்றிலும் தவறானது. போலியானது. சாதாரண சட்டத்தின் பிரகாரமே அந்த தேரர்கள் கைது செய்யப்பட்டார்கள். பொதுச்சட்டத்தின் பிரகாரமே உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆகவே எதிர்க்கட்சியினர் ஏன் இவ்வாறு பொய்யுரைக்கிறார்கள். அதேபோல் அவசரகால சட் டத்தை பயன்படுத்தி ஊடகங் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று குறிப் பிடுகிறார்கள். எந்த ஊடகத்துக்கு எதிராக, என்ன நடவ டிக்கை எடுக்கப்பட்டது என் பதை எதிர்க்கட்சியினர் குறிப்பிட வேண்டும்.

எந்த போராட்டத்துக்கு எதிராக நடவடிக்கை எடுத்தோம் என்பதை எதிர்க்கட்சி குறிப்பிட வேண்டும். மக்களை தவறாக வழிநடத்தும் விடயங்களையே குறிப்பிடுகிறார்கள்.

புதிய கல்வி மறுசீரமைப்பு நீக்கப்படவில்லை. தற்காலிகமாகவே பிற்போடப்பட்டுள்ளது. ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் தவறுகளை திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாங்கள் எதனையும் மூடிமறைக்கவில்லை.

எதிர்க்கட்சியினர் தான் இவ்விடயத்தில் இரட்டை நிலைப்பாட்டில் உள்ளார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் கல்வி மறுசீரமைப்புக்கு பாரியதொரு எதிர்ப்பை ஏற்படுத்தி தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்தினார்கள். தற்போது தாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்று குறிப்பிடுகிறார்கள்.

எதிர்க்கட்சியினர் எதிர்ப்பு தெரிவிக்கவில்லையாயின் யார் போராட்டங்களை நடத்தியது, யார் கதிர்காமத்துக்குச் சென்று தேங்காய் உடைத்தது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஹொரன தொகுதி அமைப்பாளர் தேங்காய் உடைக்கும் நடவடிக்கையை ஏற்பாடு செய்தார்.

கதிர்காமத்தில் தேங்காய் உடைக்கும் போது “என்னை வீடியோ எடுக்க வேண்டாம், அந்த பக்கம், அந்த பக்கம்” என்று சொன்னதை முழு நாடும் பார்த்தது.

புதிய கல்வி மறுசீரமைப்புக்கு எதிராக பிரதேச மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் எதிர்ப்புகளை தோற்றுவிக்கவில்லையா, கல்வி ஆபாசமாக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடவில்லையா, கல்வி ஆபாசமானது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் தெளிவுபடுத்த வேண்டும். ஆரோக்கியமான கருத்துக்களுக்கும், கேள்விகளுக்கும் பதிலளிக்க முடியும். அதனை விடுத்து வதந்திகள் பற்றி பேசுவது பயனற்றது”- என்றார்.(எ)

# இராணுவத்தின் கௌரவத்தை பாதுகாக்கவே நாங்கள் அரசியலில் முன்னிலையானோம்

### பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர

கொழும்பு, பெப். 08

இராணுவத்தினரின் கௌரவம் பற்றிப் பேசும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரின் சகோதரர் எந்தவித தகுதியுமில்லாமல் கடற்படைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டார். அவரது தந்தையின் ஆட்சியில் இராணுவத்தினர் எவ்வாறு பயன்படுத்தப்பட்டார்கள் என்பதை முழு நாடும் நன்கு அறியும். இராணுவத்தின் கௌரவத்தை பாதுகாப்பதற்காகவே நாங்கள் அரசியலில் முன்னிலையானோம் என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“டித்வா புயல் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட நாட்டை மீட்டெடுப்பதற்கும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிவாரணமளிப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே பொதுப் பாதுகாப்பு சட்டத்தின் பிரகாரம் அவசரகால சட்டம் ஜனாதிபதியால் அமுல்படுத்தப்பட்டு, செல்லுபடி காலம் இரண்டாவது முறையாகவும் நீடிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இலங்கையை மீட்டெடுப்பதற்காக பிரதமர் தலைமையில் 25 பேரை உள்ளடக்கிய வகையில் செயலணி ஒன்று நியமிக்கப்பட்டு, 08 உப குழுக்கள் நியமிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நெருக்கடியான நிலையில் பாதிக்கப்பட்ட போது 32 நாடுகள் இலங்கைக்கு பல்வேறு வழிமுறைகளில் ஒத்துழைப்பு வழங்கின.

அனர்த்த நிலைமையின் போது அரச அதிகாரிகள், முப்படையினர் மற்றும் பொலிஸார் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறார்கள். இன்றும் அவ்வாறே செயல்படுகிறார்கள். முப்படையினரின் ஒத்துழைப்பு இல்லாமல் இந்த நெருக்கடியில் இருந்து ஒருபோதும் மீள முடியாது.

சுதந்திர தினத்தன்று இராணுவத்தினர் கௌரவிக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். இவர்களது ஆட்சியில் இராணுவத்தினர் எவ்வாறு மதிக்கப்பட்டார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். இளவரசர்கள் ரேஸ் ஓடுவதற்கு மண் நிரப்புவதற்காகவே கடந்த காலங்களில் இராணுவத்தினர் பயன்படுத்தப்பட்டார்கள். இராணுவத்தின் கௌரவத்தை பாதுகாப்பதற்காகவே நாங்கள் அரசியலில் முன்னிலையானோம். இராணுவத்தினரோ அல்லது பொலிஸாரோ தற்போது அரசியலுக்காக பயன்படுத்தப்படவில்லை”- என்றார். (எ)

## முட்டுக்கட்டை ...

8ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஜனாதிபதியின் விருப்பத்தெரிவை அங்கீகரிப்பதை விடுத்து சுயாதீனமாக மதிப்பீட்டைச் செய்து தீர்மானத்தை எடுப்பதில் பேரவைக்கு இருக்கும் திடசங்கற் பத்தையும் பிரதிபலித்தது.

சமுதிகா ஜெயரத்னவின் பெயரை மீண்டும் பிரேரிப்பதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானம் தெளிவான விருப்பத்தெரிவைப் பிரதிபலித்த அதே வேளை, மாறிவிட்ட சூழ்நிலைகளில் நியமன விவகாரத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய தேவையையும் ஏற்படுத்தியது. இறுதியில் சமுதிகா ஜெயரத்னவுக்கு கிடைத்த அங்கீகாரம் தகுதி, நேர்மை மற்றும் சுயாதீனம் தொடர்பில் தேவையான தராதரங்கள் அவருக்கு இருப்பதாக அரசியலமைப்பு பேரவை திருப்திப்பட்டதையும் வெளிக்காட்டியது. புதிய சிவில் சமூகப் பிரதிநிதிகள் உட்பட அரசியலமைப்பு பேரவையின் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றமும் புதியதும் கூட்டானதுமான ஒரு மதிப்பீட்டை செய்வதற்கு வசதியாக அமைந்தது. கணக்காளர் நாயகம் பதவி, குறிப்பாக கடந்த காலத்தில் அரசாங்க வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், துறைசார் நிபுணத்துவம், தார்மீகத் துணிச்சல் மற்றும் நிறுவனரீதியான சுயாதீனம் ஆகியவற்றை வேண்டிநிற்கிறது.

ஏகமனதான தீர்மானத்தை எட்டியதன் மூலமாக அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்கள் கணக்காய்வாளர் நாயகம் பதவி அதிகாரத்தையும் மக்களின் நம்பிக்கையையும் கொண்டிருப்பதை உறுதிசெய்வதற்கான கூட்டுப் பொறுப்பை வெளிக்காட்டியிருக்கிறார்கள்.

நியமனங்கள் தொடர்பில் கருத்தொருமிப்பின் அடிப்படையில் கூட்டாகத் தீர்மானங்களை எடுப்பது நிறுவனங்களை பலப்படுத்துவதுடன் மக்களின் நம்பிக்கையையும் அதிகரிக்கிறது. ஜனாதிபதியும் அரசாங்கமும் கொண்டிருக்கும் ஜனநாயக ஆணை அதிகாரத்தையும் பொறுப்பையும் சுமந்து நிற்கிறது.

அரசியலமைப்பு பேரவையின் நியாயப்பாடு தேர்தல் மூலமான அங்கீகாரத்தில் அல்ல, சமநிலையானதும் கோட்பாட்டை அடியொற்றியதுமான தீர்மானங்களை எடுப்பதிலேயே தங்கியிருக்கிறது.

கட்டுப்பாடு, பரஸ்பர மதிப்பு மற்றும் பொதுநன்மை மீதான பற்றுறுதி ஆகியவற்றினால் வழிநடத்தப்படும் போது நிறுவனங்கள் சிறப்பாக செயற்படுகின்றன என்பதை இலங்கையின் அனுபவம் வெளிக்காட்டுகிறது. கணக்காய்வாளர் நாயகம் விவகாரத்தில், கருத்தொருமிப்பு ஜனநாயக அதிகாரமும் அரசியலமைப்பு ரீதியான மேற்பார்வையும் ஒத்தசைந்து இயங்குவதை சாத்தியமாக்கியிருக்கிறது. அத்தகைய ஒரு சமநிலையை காண்பது என்பது மிகவும் சிக்கலானது, ஆனால் அரசியலமைப்பு ரீதியான ஆட்சி முறை நிலைபேறாக இருப்பதற்கும் மக்களின் நம்பிக் கையை பெறுவதற்கும் அது என்றென்றும் அவசியமானதாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமந்திரனின்...

இவரது நியமனம் பாராளுமன்றத்தை ஒரு தமிழ்த் தேசிய மேடையாகப் பயன்படுத்துவதைச் சிதைத்து விடும். உட்கட்சிப் பிரச்னைகளை விட இது தமிழ்த் தேசியத்தின் இருப்பு சார்ந்த பிரச்னையாகும். எனவே, சிறீதரன் மீதான குற்றச்சாட்டுகளை சுமந்திரன் போன்றவர்கள் விசாரிக்க அருகதை இல்லை, மக்கள் நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும்.

சுமந்திரனின் அணுகுமுறையால் தமிழ்த் தேசிய சக்திகள் சிதறடிக்கப்படுகின்றன. சிறிதரன் கட்சிக்குள் இருந்து போராட வேண்டுமா அல்லது புதிய அணியாக வெளியேற வேண்டுமா என்பது குறித்த விவாதம் எழுந்துள்ள நிலையில், சிவில் அமைப்புகள் இதில் தலையிட்டுத் தீர்வுகாண வேண்டும்.

தந்தை செல்வாவினால் உருவாக்கப்பட்ட தமிழரசுக் கட்சி அதன் அடிப்படைக் கொள்கைகளிலிருந்து விலகிச் செல்வதைத் தடுக்க மக்கள் திரட்சி அவசியம்- என்றார். (அ)

## கிவுல் ஓயா...

மேற்கொள்கின்ற போது குறித்த கிராமத்தில் இயங்குகின்ற கிராம அபிவிருத்தி சங்கம் உட்பட பல்வேறுபட்ட அமைப்புக்களுடனோ கல்விமான்கள் உடனோ, கலந்துரையாடாடப்படுவதில்லை.

மாறாக கடந்த தேர்தலிலே தற்போதைய அரசாங்கத்திற்கு போஸ்டர் போன்ற வேலைகளைச் செய்தவர்களை பிரஜா சக்திக்கு தலைவர்களாக நியமித்து அவர்களுக்குக் கீழே அவர்கள் விரும்புகின்ற பலரை உறுப்பினர்களாக நியமித்துச் செயல்படுகின்ற ஓர் அமைப்பாக அது மாறி இருக்கிறது.

தேசிய மக்கள் சக்தியினை சாராத உள்ளூராட்சி உறுப்பினர்கள் குறித்த பிரஜா சக்தியில் தலைவர்களா கவோ அல்லது உறுப்பினர்களாகவோ சேர்க்கப்படா மல் செயல்படுவது ஒரு சிறுபிள்ளைத்தனமான செயல்பாடு-என்றார். (அ)

## முல்லைத்தீவில்...

துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்- நெல் சந்தைப்படுத்தல்சபை விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவை விரைந்து ஆரம்பிக்கவேண்டுமென தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றேன். அந்தவகையில் கடந்த 20.01.2026 பாராளுமன்றில் நெற்கொள்வனவை விரைந்து ஆரம்பிக்குமாறு வலியு றுத்தியிருந்தேன்.

அதனைத் தொடர்ந்து கடந்த 21.01.2026அன்று இடம்பெற்ற விவசாய அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இதுதொடர்பில் பேசியபோது அமைச்சர் லால்காந்த மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை அதிகாரிகளால் கடந்த 26.01.2026 அன்று நெற் கொள்வனவு ஆரம்பிக்கப் படுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனைத்தொடர்ந்து 27.01.2026 அன்று இடம் பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கி ணைப்புக் குழுக்கூட்டத்திலும் நெற்கொள்வனவு தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தேன்.

அதன்போது மறுநாள் 28ஆம் திகதியிலிருந்து நெற்கொள்வனவு ஆரம்பிக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்டசெயலாளர் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ஆகியோரால் பதில் வழங்கப்பட்டிருந்தது. எனினும் நெல் சந்தைப்படுத்தல் சபை இதுவரை நெற்கொள்வனவை ஆரம்பிக்கவில்லை.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையினுடைய நெற் களஞ்சிய சாலைகளில் ஏற்கனவே கடந்த 2025ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கைக்காலத்தில் கொள்வனவுசெய்த நெல் உரியவகையில் அகற்றப்படாமல் இருப்பில் இருப்பதாக அறியமுடிகின்றது. இதனாலேயே நெற் கொள்வனவிற்கு காலதாமதம் ஏற்படுவதாகவும் அறிகின்றோம்.

அந்தவகையில் தண்ணீரூற்று நெற் களஞ்சிய சாலை யில் 10 மெற்றிக்தொன் நெல் இருப்பில் காணப்படுவ துடன், புதுக்குடியிருப்பில் 15 மெற்றிக்தொன், உடை யார்கட்டு 25 மெற்றிக் தொன், முள்ளியவளை 100 மெற்றிக் தொன், கோம்பாவில் 20மெற்றிக் தொன், விசுவமடு 130 மெற்றிக் தொன் என முல்லைத் தீவு மாவட்டத்தில் நெல்சந்தைப் படுத்தல் சபைக்குரிய களஞ்சியசாலைகளில் மொத் 304மெற்றிக்தொன் நெல் களஞ்சியசாலைகளின் இருப்பில் தேங்கியுள்ளதாக அறிய முடிகின்றது.

ஏற்கனவே 2025ஆம் ஆண்டு சிறுபோகக் காலத்தில் நெல்சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய் யப்பட்டநெல் களஞ்சியங்களில் தேங்கியிருப்பதற்கான காரணம் என்ன?

இவ்வாறு களஞ்சியசாலையில் தேக்கநிலையில் உள்ள நெல்லினை உரியகாலத்தில் வெளியேற்றி களஞ்சியசாலையை நெற்கொள்வனவிற்கு ஏற்றவாறு நெல் சந்தைப்படுத்தல்சபை தயார்நிலையில் வைத்திருந் திருக்கவேண்டும்.

ஆனால் நெல்சந்தைப்படுத்தல் சபையினர் அசமந்தப்போக்குடன் இருந்ததினாலேயே தற்போது களஞ்சியசாலைகள் இடமின்றி நிறைந்திருக்கின்றன.

எனவே தற்போது நெற்கொள்வனவிற்கென அரசால் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளபோதும் நெல்சந்தைப்படுதனதல் சபையின் அசமந்தப்போக்கால் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வ தற்கு களஞ்சியசாலைகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் ஏற்கனவே நெல் சந்தைப்படுத்தல் சபை அதிகாரிகளினால் உறுதியுரைக்கப்பட்டதைப்போன்று விவசாயிகளிடமிருந்து இன்னும் நெற்கொள்வனவு மேற்கொள்ளப்படவில்லை.

குறிப்பாக குமுழமுனைப்பகுதியில் மாத்திரம் நெல் சந்தைப்படுத்தல் சபையினர் நெல்தரங்களைப் பார்வை யிட்டதுடன், எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து நெற்கொள்வனவை ஆரம்பிக்கவுள்ளதாக விவசாயிகளிடம் தெரிவித்துள்ளதாக அறிகின்றோம்.

இவ்வாறாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் அசமந்தப்போக்கினால் தற்போது விவசாயிகளே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக ஏற்கனவே டித்வா புயல் வெள்ள அனர்த் தங்களினாலும், தொடர்ந்து நிலவும் வானிலையாலும் பாரிய பாதிப்புக்களைச் சந்தித்துள்ள விவசாயிகளுக்கு, நெல் சந்தைப்படுத்தல் சபையின் நெற்கொள்விலும் காலதாமதம் ஏற்படுவது மேலும் அவர்களை பாதிப் பிற்குள்ளாக்குவதாக அமைகின்றது.

எனவே நெல் சந்தைப்படுத்தல் சபையினர் தொடர்ந் தும் அசமந்தப்போக்குடன் செயற்படாமல் விரைந்து விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவை மேற் கொள்ள ஆரம்பிக்கவேண்டும்.

அவ்வாறு விரைவாக நெற்கொள்வனவை மேற் கொள்ளத் தவறினால் விவசாயிகளுடன் இணைந்து நெல்சந்தைப்படுத்தல் சபைக்கெதிராக பாரிய ஆர்ப் பாட்டம் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ)

# கிரிக்கெட் மட்டையால் தாக்கி இளைஞன் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 08

இரத்மலானை பகுதியில் கிரிக் கெட் மட்டையால் தாக்கப்பட்டு இளைஞன் ஒருவர் உயிரிழந்துள் ளார்.

இரு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலே இந்த உயிரி ழப்பு காரணம் என தெரிவிக்கப் பட்டது.

தர்மாராம வீதி புகையிரத பாதைக்கருகில் வசிக்கும் இரு குடும்பங்களுக்கு இடையில் நேற்று முன் தினம் வாக்குவாதம் முற்றிய நிலையில் ஒரு தரப்பினர் கிரிக் கெட் மட்டை மற்றும் விக்கெட் தடிகளால் இளைஞன் ஒருவரை தாக்கியுள்ளனர்.

இத் தாக்குதலில் பலத்த காயம டைந்த இளைஞன் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந் துள்ளார்.

உயிரிழப்பு தொடர்பில் நான்கு பெண்கள், இரு ஆண்கள் உட்பட அறுவர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

(அ)

## மழை...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஊவா மாகாணத்திலும் மாத்தளை, நுவரெலியா, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் மேல் மற்றும் சபரகமுவ மாகாணங்க ளிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களில் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேலும் மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மாத்தளை, திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்தகாற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## நாமல்...

காட்டிக்கொள்வதற்கு நாமல் ராஜபக்ஷ முற்படு கின்றார்.

தெற்கில் வாக்குகேட்டு சிங்கள மக்களின் ஆதரவு டன் பாராளுமன்றம் வருவதற்கு தற்துணிவற்ற நபரே இன்று வீரவசனம் பேசி அழைக்கின்றார்.

மக்களைப் பற்றி கதைப்பதற்கு இவருக்கு எவ்வித அருகதையும் இல்லை. நாட்டை நாசமாக்கிய கூட்டமே தற்போது இனவாத அரசியலை முன்னெடுக்க முற்படு கின்றது. சிங்கள், பௌத்த மக்கள் நேர்மையானவர்கள். ஆனால் சிங்கள, பௌத்த மக்கள் எனக் காட்டிக் கொள்ளும் இந்த அரசியல்வாதிகளே ஊழல், மோசடி களில் ஈடுபட்டனர்.

இனவாதத்துக்கு இனி இடமில்லை. நாமலின் இனவாத அரசியல் இனியும் எடுபடாது-என்றார். (அ)

## மலையக...

கோரிக்கை விடுத்துள்ளார்.

"டித்வா" சூறாவளிக்குப் பின்னரான அரசாங்கத்தின் 50 இலட்சம் ரூபாய் தேசிய வீட்டு மறுசீரமைப்புத் திட்டத்திலிருந்து மலையக மக்கள் புறக்கணிக்கப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மலையக மக்களைத் தேசிய திட்டங்களுக்குள் உள்ளீர்க்காமல், இந்திய உதவித் திட்டங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துவது அவர்களை "இரண்டாம் தர பிரஜைகளாக" நடத்துவதாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுக்குமாடிக் குடியிருப்புகளைத் திணிப்பதன் மூலம் மலையக மக்களின் நில உரிமையை அரசு தட்டிப்பறிக்க முயல்கிறது.

இதனை தமது கூட்டணி வன்மையாக எதிர்ப்ப துடன், மக்களுக்குச் சொந்தமான காணி உரிமையுடன் கூடிய வீடுகளையே கோருவதாகவும் அதன் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (அ)

## சூழ்ச்சி...

இருக்கமாட்டோம். ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதற்கு சூழ்ச்சி செய்ய மாட்டோம்.

அதிகாரத்தை நாம் மோசடிக்காக பயன்படுத்த வில்லை. நாட்டுக்காகவே பயன்படுத்துகின்றோம். நாட்டுக்கு சேவைசெய்த திருப்தியுடன் மரணிக்க வேண்டும். அது போதும்.

மக்கள் ஆசியுடன் எமது ஆட்சி தொடரும். நாட்டை நாம் கட்டியெழுப்புவோம்-என்றார். (அ)

## டித்வாவினால்...

பொறுப்பேற்கப் பலர் முன்வந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, முறையான சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி, நீதிமன்ற உத்தரவுகளுக்கு உட்பட்டு குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என சாவித்ரி போல்ராஜ் குறிப்பிட்டுள்ளார். (அ)

## கச்சத்தீவு...

வடக்கு கடற்படைப் பகுதித் தளபதியின் மேற்பார் வையின்கீழ், கச்சத்தீவில் உள்கட்டமைப்பு மேம்பாட் டில் கடற்படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

வரவிருக்கும் திருவிழாவுக்குத் தயாராகும் வகையில் சுகாதாரம் மற்றும் குடிதண்ணீர் வசதிகள், தற்காலிக தங்குமிடங்கள், வீதிகள், படகுத் தளங்கள் மற்றும் மின் சாரம் வழங்குவதை உறுதி செய்தல் உள்ளிட்ட வசதி கள் செய்யப்படுவதாக இலங்கை கடற்படை தெரிவித் துள்ளது.

அத்துடன், வருடாந்த திருவிழாவில் கலந்து கொள் ளும் பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பிற்காக இலங்கை கடற்படை தற்காலிக உயிர்காக்கும் குழுக்கள் மற்றும் மருத்துவக் குழுக்களை நிறுத்த உள்ளது.

மேலும், இலங்கை கடற்படையால் கட்டப்பட்ட ஆலயத்தின் வண்ணத் துப்புரவு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளை கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர், அதேநேரம், சுற்றியுள்ள பகுதி மற்றும் வளாகத்திற்குச் செல்லும் வீதிகளை சுத்தம் செய்யும் பணிகளையும் கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர்.

காங்கேசன்துறை மற்றும் குறிகட்டுவானில் இருந்து கச்சத்தீவுக்கு செல்வோர் மற்றும் திருவிழாவிற்கு தேவையான உபகரணங்களை ஏற்றிச் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இலங்கை கடற்படை செய்துள்ளதாக தெரிவித்துள்ளது. (அ)

## கணினி...

தற்போது அதிகரித்து வரும் குற்றங்களின் தன்மை குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர், நாளொன் றுக்கு 23 முதல் 25 வரையான சைபர் குற்றங்கள் பதிவா குவதாகவும், இது கணிசமான அளவு உயர்வு எனவும் சுட்டிக்காட்டினார்.

இக்குற்றங்களை வினைத்திறனுடன் விசாரணை செய்து தீர்ப்பதற்குத் தேவையான புதிய தொழில்நுட் பம், விசேட அறிவு மற்றும் பொலிஸ் திணைக்களத்தை நவீனமயமாக்கும் செயற்பாடுகள் முறையாக முன்னெ டுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை பொலிஸ் சேவையை மிகவும் சிறந்த, வினைத்திறனான மற்றும் ஊழலற்ற திணைக்களமாக மாற்றுவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என்றும், அதற்காகத் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருவதாகவும் அவர் வலியுறுத்தினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மதுவரித் திணைக்களத்தின் வருமான சேகரிப்பு சீரமைப்பு

கொழும்பு, பெப். 08

மதுவரித் திணைக்களத்தின் வருமான சேகரிப்பு, மறுசீரமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் செயல்முறை குறித்த கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

மதுவரித் திணைக்களத்தின் செயல்திறனை அதிகரிப்பதன் மூலம் வருமான சேகரிப்பை அதிகரிக்கும் நோக்கில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், டிஜிற்றல் மயமாக்கல், புதிய மறுசீரமைப்புகள் மற்றும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டன. டிஜிற்றல் மயமாக்கலின் செயல்திறனை அதிகரித்தல், மனிதவள மேம்பாடு மற்றும் அதிகாரிகளின் நலன்புரி நடவடிக்கைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்த முயற்சிகள் வெற்றி பெற தொழிற்சங்கங்களின் ஆதரவை வழங்குவதன் முக்கியத்துவமும் இந்தக் கலந்துரையாலில் வலியுறுத்தப்பட்டது.

மதுவரித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எம். பி. என். ஏ. பிரேமரத்ன, மதுவரித் திணைக்களத்தின் அதிகாரிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அரச வருமான நிர்வாக மறுசீரமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் பணியகத்தின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (அ)

## இலங்கை மீனவப் படகுகள் மீது தாக்குதல் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுப்பு

### கடற்றொழில் பிரதி அமைச்சர் தகவல்

கொழும்பு, பெப். 08

இலங்கை கடற்பரப்பில் இரண்டு மீனவப் படகுகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில், அரசாங்கம் என்ற ரீதியில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்தார்.

ஹிக்கடுவ பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு இலங்கை கடற்படைக்கும், வெளிவிவகார அமைச்சுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் இந்திய தூதுவர் அலுவலகம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்ததாகவும், அதில் இந்திய கடற்படையோ அல்லது இந்திய கடலோரக் காவல்படையோ இச்சம்பவத்துடன் தொடர்புபடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர், எவ்வாறாயினும் இது குறித்து உண்மைகளைக் கண்டறிய அமைச்சு தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவித்தார்.

இது குறித்து மேலதிகமாக கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர் ரத்ன கமகே:

கடந்த நாட்களில் இலங்கை கடற்பரப்பில் எமது இரண்டு மீனவப் படகுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எமது அண்டை நாடான இந்தியாவின் கடலோரக் காவல்படையினரே இத்தாக்குதலை நடத்தியதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். நாம் ஓர் அரசாங்கம் என்ற வகையில் இது குறித்து ஆராய வேண்டும். எனவே கடற்படைக்கும், வெளிவிவகார அமைச்சுக்கும் இது பற்றி விசாரிக்குமாறு கூறினோம். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்திய தூதுவர், இது இந்திய கடலோரக் காவல்படையினராலோ அல்லது இந்திய கடற்படையினராலோ மேற்கொள்ளப்பட்டதல்ல என்று மறுத்துள்ளார்.



எனினும் ஓர் அரசாங்கமாகவும், அமைச்சாகவும் நாம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம். எமது நாட்டு மீனவ மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எமக்கு அவசியமாகும். இது குறித்து ஆராய்ந்து சரியான அறிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இது வெளிநாட்டினராலா, நம் நாட்டவர்களாலா, வேறு கும்பலா, உத்தியோகபூர்வ குழுவா அல்லது உத்தியோகபூர்வ மற்ற குழுவா என்பது குறித்து விசாரித்து வருகிறோம். அதைத்தான் நாம் செய்ய வேண்டும் - என்றார். (அ)

## சமூகத்தின் முன்னேற்றத்துக்கு பணியாற்ற ஆசிரியர்கள் தயார்!

### கூறுகிறார் ஜோசப் ஸ்டாலின்

கொழும்பு, பெப். 08

ஆசிரியர்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் கல்வித்துறையின் மேம்பாட்டிற்கும் முழு உறுதிமொழியுடன் பணியாற்ற தயாராக உள்ளனர் என அலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளார் ஜோசப் ஸ்டாலின் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில், ஆசிரியர் சங்கத்தின் உத்தியோப்பூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

கல்விச் சீர்திருத்தங்களில் அரசு நடவடிக்கைகளை ஆதரித்து, சக்திவாய்ந்த முறையில் கல்வி தரத்தை உயர்த்தும் முயற்சிகளில் சங்கம் இணைந்து செயல்படும் என ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாமல், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனுக்காக அரசாங்கத்துடனான கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதில் சங்கம் முழுமையான பொறுப்புடன் இருக்குமெனவும் அவர் கூறினார். (அ)

## பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக நீதி அமைச்சுக்கு முன் நேற்று போராட்டம்

கொழும்பு, பெப். 08

பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் பொதுச் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான மெருகூட்டப்பட்ட சட்டங்களுக்கு எதிராக பல சிவில் அமைப்புகள் இணைந்து நேற்று நீதி அமைச்சுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டன.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தின்போது கருத்து தெரிவித்தவர்கள், இச்சட்டங்கள் அடிப்படை மனித உரிமைகளையும் ஜனநாயக சுதந்திரங்களையும் பாதிக்கும் வகையில் பயன்படுத்தப்படுகின்றன என்ற கவலை வெளியிட்டனர்.

பொதுமக்களின் குரல் அடக்கப்படும் சூழ்நிலைகள் உருவாகக் கூடாது என்றும், சட்டங்கள் மனித உரிமை தரநிலைகளுக்கு ஏற்ப திருத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இந்நிகழ்வில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், பாதுகாப்பு என்ற பெயரில் குடிமக்களின் உரிமைகள் மீறப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும், சட்டங்கள் வெளிப்படைத் தன்மையுடனும் பொறுப்புணர்வுடனும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

சமூக செயற்பாட்டாளர் சுரேன் பெரேரா, சட்ட அமுலாக்கத்தின் போது நீதிமுறை நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவது அவசியம் என குறிப்பிட்டதுடன், கைது மற்றும் தடுத்து வைப்பு நடைமுறைகள் சட்டபூர்வமான கண்காணிப்பின் கீழ் இருக்க வேண்டும் என்றார்.

சமூக மற்றும் சமாதான மையத்தின் நிறைவேற்று இயக்குநர் ரோஹான் சில்வா, நாட்டில் நல்லிணக்கம் மற்றும் ஜனநாயக சூழல் நிலைநிறுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தினார்.

அச்சமும் சந்தேகமும் நிறைந்த சமூக சூழலை உருவாக்கும் சட்ட அணுகுமுறைகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றார். (அ)

## அந்தூரியம் செடிகளுடன் பெண்கள் இருவர் கைது

கொழும்பு, பெப். 08

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய அந்தூரியம் செடிகளுடன் அவற்றை கொண்டு வந்த இலங்கை பெண்கள் இருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள், பல்லுயிர் கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகள் மற்றும் கட்டு நாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட பெண்களில் ஒருவர் கொழு ம்பு பிரதேசத்தை சேர்ந்த 45 வயதுடையவர் என்பது டன், மற்றையவர் அவிசா வளை பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடையவராவார்.

இவர்கள் இருவரும் தாய்லாந்தில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளனர்.

இவர்கள் கொண்டு வந்த பயணப் பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 436 அந்தூரியம் செடிகள் இதன்போது கைப்பற்றப்பட்டன.

எனினும், அந்தச் செடி களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான விவசாய திணைக்களத்தின் இறக்குமதி அனுமதிப்பத்திரம் அவர்களிடம் இருக்கவில்லை.

வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் மற்றும் தாவரங்கள் தனிமைப்படுத்தல் சட்டத்தின் விதிகளை மீறி அவர்கள் இந்தச் செடிகளை கொண்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பெண்கள் இருவ ரும் தற்போது கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளின் பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (எ)

## இந்திய போர்க்கப்பல் நாடு திரும்பியது

கொழும்பு, பெப். 08

கட ந்த 4 ஆம் திகதி, இலங்கைக்கு 4 நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட இந்திய போர்க்கப்பல், உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து, நாடு திரும்பியுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில், நேற்று முன்தினம் இந்தி யக் கப்பலுக்கு கடற்படையினால் சம்பிரதாயபூர்வ பிரியாவிடை வழங்கப்பட்டது.

இந்திய போர்க்கப்பல் நாட்டில் தங்கியிருந்த போது, அந்தக் குழுவினர், கொழும்பு பகுதிகளில் உள்ள முக்கியமான சுற்றுலாத் தலங்களை பார்வையிட்டனர். இதன்போது, கப்பலின் கட்டளை அதிகாரிக்கும்,

மேற்கு கடற்படை கட்டளைத் தளபதிக்கும் இடையே, மேற்கு கட்டளைத் தலைமையகத்தில் உத்தியோகபூர்வ சந்திப்பும் இடம் பெற்றது. இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் ஒருங்கிணைப்பினால், இந்திய போர்க்கப்பலில் கொண்டுவரப்பட்ட பத்து தற்காலிக பாலங்கள், இந்த வாரம் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பொகவந்தலாவை பொலிஸ் நிலையத்தில் கத்திக்குத்து!

கொழும்பு, பெப். 08

பொகவந்தலாவை பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்து வந்த பொலிஸ் உத்தி யாகத்தர் ஒருவர் மற்றும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரை கத்தியால் குத்திய சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம் பெற்றதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் அதிகரித்ததன் காரணமாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தரை கத்தியால் குத்தியுள்ளதாகவும், காயங்களுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதன் பின் நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கத்திகுத்தை மேற்கொண்ட பொலிஸ் உத்தியோக த்தரை கைது செய்வதற்கான நடவடிக்கை மேற் கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org